Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
(C/490)
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 12 சனிக்கிழமை (26.03.2011) பக்கங்கள் 12 ஓசை – 177

# சகலரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்கத் தயார்!



## ஜனாதிபதி அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

சகல இனங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலான தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்குவதற்கு தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்றைய தினம் உள்ளூர் ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் ஆசிரியர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறுதெரிவித்தார்.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப் (11 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டு உதவியுடன் இயங்கும் நிறுவனங்கள் மீது தீவிர விசாரணை

## குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிரடி

(கொழும்பு)

**வெளிநாட்டு உதவி நிறுவனங்களிடமிருந்தும் வெளிநாடுகளிடமிருந்தும் நேரடியாக நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது குற்றப் புலனாய்வுத்துறையினர் விசாரணைகளையும் தீவிர கண்காணிப்பையும் முடுக்கிவிட்டுள்ளனர்.**

குறிப்பாக கடந்த பல ஆண்டுகளாக குறிப்பிட்ட சில உள்ளூர் உதவி நிறுவனங்கள் வெளிநாடுகளிலிருந்து எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி நிதியுதவிகளைப் பெற்று வந்துள்ளன.

இவ்வாறான நிறுவனங்கள் தமது நிதி வழங்கும் நிறுவனங்களின் கபட நோக்கங்களைக் கொண்ட இலக்குகளை உள்நாட்டில் எட்டுவதற்காக செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறான உதவி நிறுவனங்கள் மீதே குற்றப்புலனாய்வுத்துறை தமது விசாரணைகளைத் தற்போது துரிதப்படுத்தியுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக (11 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அணு உலை வெடித்தால் பாதிப்புக்களை தவிர்ப்பது எப்படி?

## உஷார் நிலையில் இலங்கை அதிகாரிகள்

(கொழும்பு)

இந்தியாவின் அணு உலைகளில் வெடிப்பு எதுவும் ஏற்பட்டால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நெருக்கமான தொடர்பிலிருந்து வருவதாக மின்சக்தி வலுசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இந்தியாவில் 17 அணுமின் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மேற்குலகுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்; அமெரிக்க ஜனாதிபதியின் கொடும்பாவி எரிப்பு





(கொழும்பு)

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் லிபியா மீது மேற்கொண்டுவரும் தாக்குதல்களைக் கண்டித்து கொள்ளுப்பிட்டி ஜும்மா பள்ளி வாசலுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நண்பகல் ஜும்மா தொழுகைக்குப் பின்னர் பல்வேறு முஸ்லிம் அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டு மேற்குலக நாடுகள் லிபியா மீது மேற்கொண்டுவரும் தாக்குதல்களைக் (11 ஆம் பக்கம் பார்க்க)

# அவசரகாலச் சட்ட அமுலாக்கம் தொடர்ச்சியாக நாட்டுக்கு தேவை

## அமைச்சர் அனுர பிரியதர்ஷனயாப்பா கூறுகிறார்



(கொழும்பு)

இலங்கையில் புலிகளின் அச்சுறுத்தல் இன்னும் தணியவில்லை. நாட்டின் சட்டதிட்டங்களை முறையாக அமுல்படுத்த அவசரகால சட்டத்தின் தொடர்ச்சியான அமுலாக்கம் தேவைப்படுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டதிட்டங்களைப் பாதுகாக்க 'அவசரகால சட்டம்' எப்போது (12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் சுனாமிப் பாதிப்பின் போது அமெரிக்காவை நிராகரித்தது இலங்கை

## விக்கிலீக்ஸ் வெளியிடும் தகவல்

(கொழும்பு)

இலங்கை 2004ஆம் ஆண்டு சுனாமியால் பாதிப்புக்குள்ளாகியிருந்த போது அமெரிக்கா தனது பசுபிக் பிராந்திய இராணுவத்தை உதவிக்கு அனுப்பியதை இந்தியா தவறாகப் புரிந்து கொண்டு இந்தியாவுக்கு ஆபத்து தோன்றியுள்ளதாக மத்திய அரசுக்கு தகவல் வழங்கியுள்ளது என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

ஆனால் இலங்கை மற்றும் இந்தியாவில் உள்ள அமெரிக்கா தூதரகங்கள் தாம் இந்தியாவுடன் சேர்ந்தே இந்தப் பணியில் ஈடுபடுவதாக அமெரிக்காவிற்கு தெரிவித்துள்ளன. இந்தியாவால் தமக்கு எந்த இடையூறும் இல்லை எனவும் அமெரிக்கத் தூதரகங்கள் தகவல் அனுப்பியுள்ளன.

இதேவேளை அமெரிக்கா இலங்கையுடன் சேர்ந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆஸியில் புகலிடம் தேடிச்சென்ற பலர் இன்னமும் தடுப்புக்காவலில் உள்ளனர்

(சிட்னி)

வெளிநாடுகளில் இருந்து சென்று அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரி விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் இன்னமும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் அரசியல் புகலிடம் கோரியுள்ள 1500 அகதிகளுள் 900 பேர் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு திணைக்களம் முதற்தடவையாக தகவல் வெளியிட்டுள்ளது.

குடிவரவு அதிகாரிகளின் தகவல்படி குறித்த 900 பேரில் 481 பேர் அல்லது அரைவாசியிலானோர் ஒருவருட காலத்திற்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தடுத்து வைக்கப்பட்டவர்களில் நால்வர் மன அழுத்தம் காரணமாக தற்கொலைக்கு முயற்சித்ததாகவும் தெரியவருகிறது.

# பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை

(கொக்குவில்)

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ளதாக ஆயரின் செயலாளர் வணபிதா இ.ஜி.விஜின்ரஸ் அடிகளார் தெரிவித்தார்.

இத்திருவிழாவினை முன்னிட்டு யாழ்ஆயர் அடங்கிய குழுவினர் நாளை காலை விசேட படகில் அங்கு செல்லவுள்ளனர்.

அதேவேளை, நேற்றைய தினம் கொடியேற்றத்துடன் ஆலய வழிபாடுகள் ஆரம்பமாகி இருந்தன.

மண்டைதீவு, குருநகர், பாசையூர், நாவாந்துறை இறங்குதுறைகளால் பாலைதீவுக்கு நேற்றுத் தொடக்கம் நூற்றுக்கணக்கான அடியார்கள் சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்று மாலை 4.30 மணிக்கு திருச்சிலுவைப் பாதையுடன் நற்கருணை விழா இடம்பெறும். நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு முதல் திருப்பலியும், 8.00 மணிக்கு ஆயர் ஒப்புக்கொடுக்கும் திருநாள் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

மேற்படி நான்கு துறைகளூடாகவும் பயணிகள் செல்வதற்கான அனுமதியைப் பெற்றிருப்பதாகவும் பயணிகள் தமக்குத் தேவையான குடிநீரை எடுத்துச் செல்ல வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (68)

## கோப்பாயில் கலை விழா

கோப்பாய் கலை பண்பாட்டுக் மன்றம் நடாத்தும் கலை பண்பாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி சேனாதிராசா அரங்கில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (மி)

# யாழ்.மரியன்னை பேராலயத்தில் மேய்ப்புப் பணி அலுவலகம்

(கொக்குவில்)

யாழ்.பேராலய வளாகத்தில் மேய்ப்புப் பணி அலுவலகம் 15 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டடமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

பழைய அலுவலகக் கட்டடம் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தின் போதும், 200 வருடங்கள் பழமை வாய்ந்து பழுதடைந்து விட்டதால், புதிய கட்டடம் நிர்மாணம் செய்யப்படுவதாக பங்குத் தந்தை அருட்திரு ஆர்.எக்ஸ். சகாயநாயகம் அடிகளார் தெரிவித்தார்.

தற்சமயம் சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய கட்டடத்தில் அலுவலகம் இயங்குவதாகவும், யாழ்.பேராலய பங்கு மக்களின் குடும்பப் பதிவுகளைப் பேணுவதுடன், யாழ்ப்பாணம், குருநகர், பாசையூர், கொய்யாத் தோட்டம், சுண்டிக்குழி, கொழும்புத்துறை, பாண்டியன்தாழ்வு, இராசாவின் தோட்டம், கச்சேரியடி, நரிக்குண்டு மற்றும் திருநகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த மரணித்தவர்களின் புதைகுழி ஆவணங்களைப் பேணும் பணிகள் அலுவ லகத்தால் நிர்வகிக்கப்பட்டு வருவதாகவும் பங்குத் தந்தை மேலும் தெரிவித்தார். (68)

# டெங்கு ஒழிப்புத் தீவிரம்

(ஆனைக்கோட்டை)

நுளம்பு ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு ஆனைக்கோட்டைப் பகுதியில் குறித்த பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அருந்தவராசா தலைமையில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையில் சுகாதாரத் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளதுடன், இவர்கள் அப்பகுதியிலுள்ள பாடசாலைகள், தேநீர்க் கடைகள், பொதுஇடங்கள் மற்றும் வீடுகள் என்பவற்றிற்குச் சென்று நுளம்பு பெருகும் இடங்கள் குறித்து அவதானித்து அவற்றை அழிக்குமாறும் அறிவுரைகளை வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (104)

# யாழில் வீதி விபத்துக்கள் அதிகம்; காயமடைவோரும் தாராளம்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற பல்வேறு விபத்துச் சம்பவங்களில் பாடசாலை மாணவி ஒருவர் உட்பட ஐவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்களில் இருவர் படுகாயமடைந்திருப்பதுடன், மேலும் ஒருவர் சிறு காயத்திற்கு உள்ளாகியுள்ளார்.

இச்சம்பவங்கள் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, ஆனைப்பந்திப் பகுதியில் பிற்பகல் 2.15 மணியளவில் கன்டர் வாகனம் ஒன்று முன்னால் சென்று கொண்டிருந்த சைக்கிளுடன் மோதியதில் சைக்கிளில் பயணம் செய்த ஏகானந்தசிவம் (வயது-45) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். பிற்பகல் 2.30 மணியளவில் பிரதான வீதி நாவலர் வீதியில் ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் இருவர் காயமடைந்தனர். இதில் நெடுந்தீவைச் சேர்ந்த மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த க.ஜெனாதீபன் (வயது 27), ஆட்டோ சாரதியான ம.தர்மகுலராசா (வயது-45) என்பவருமே காயமடைந்தனர். அத்தோடு, ஏ-9 பாதையில் வஸ்தியன் சந்தியில் ஆட்டோவும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் விபத்துக்குள்ளாகியதில் இருவர் காயமடைந்தனர்.

இதேவேளை, முனீஸ்வரன் வீதியில் மோட்டார் சைக்கிள் பாடசாலை மாணவி ஒருவர் மீது மோதியதில் காயமடைந்த மாணவியும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (மி)

# யாழ்.பொது நூலகத்திற்கு மருத்துவ நூல்கள் அன்பளிப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்திற்கு கொழும்பு றோட்டறிக் கழகத்தினால் மருத்துவத்துறை சார்ந்த சுமார் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி நூல்கள் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

யாழ்.பொது நூலகத்தில் நேற்று முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்து கொழும்பு றோட்டறிக் கழகத்தினால் யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

அன்பளிப்பாக வழங்கப்பட்ட இந்நூல்தொகுதி மருத்துவ பீட மாணவர்கள், வைத்தியர்கள் மற்றும் மருத்துவத்துறை சார்ந்தவர்களுக்கு பேருதவியாக அமையுமெனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் யாழ்.பொதுநூலகத்திற்கு வெளிநாடுகளிடமிருந்தும் உள்நாட்டில் இருந்தும் பொது அமைப்புக்களிடம் இருந்தும் பெருமளவான அரியவகை சகலதுறை நூல்களும் அன்பளிப்பாக கிடைத்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான அன்பளிப்புக்களின் மூலமாக யாழ்.பொது நூலகத்தின் சேவை மேலும் விரிவு பெற்று வருகின்றது. (பா)

# வைத்தியசாலையில் வளப்பற்றாக்குறை; இது கிளிநொச்சியின் இன்றைய நிலை

(வடமராட்சி)

கிளிநொச்சி வைத்தியசாலையில் நிலவும் வளப்பற்றாக்குறையினால் இவ் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் சிகிச்சை பெறுவதில் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுவதுடன், ஆளணிப் பற்றாக்குறையும் காணப்படுவதாகவும் இதனால், உரிய முறையில் நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்க முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வைத்தியசாலையிலுள்ள பிணவறைக்கு குளிரூட்டி வசதிகள் இல்லாமையால் இறந்தவர்களின் சடலங்கள் பழுதடைவதாகவும், இதனால் பெரும் சிரமங்கள் காணப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, நோயாளர்களின் நன்மை கருதி இவ்வைத்தியசாலையின் தேவைகளை உரியவர்கள் பெற்றுத்தருமாறு நோயாளர்களும், பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

## பாடசாலை நூலகங்களுக்கு நூல்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை நூலகங்களுக்கான நூல்கள் வழங்கும் வைபவம் கௌரவ ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களால் யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நாளை காலை 7.30 மணியளவில் இடம் பெறவுள்ளது.

எனவே இந்தநிகழ்வில், யாழ்.வலயப் பாடசாலை அதிபர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

# கட்டாக்காலி கால்நடைகளை மடக்கிப் பிடிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்குப் பகுதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் கால் நடைகளைப் பிடித்துக் கட்டுப்படுத்துவது குறித்து நாவற்காடு பிரதேசத்தில் ஜே/90 கிராம சேவகர் பிரிவில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கால் நடை வளர்ப்போர் அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளை பிடிப்பதற்கு 300 அடி நீளமும் 50 அடி அகலமும் கொண்ட பட்டி அமைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் வ.ஸ்ரீகணேஸ் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நேரடிக் கவனத்திற்கு இவ் விடயத்தைக் கொண்டு வந்ததையடுத்து அமைச்சர் அவர்கள் நல்லூர் பிரதேச செயலாளருடன் தொடர்புகொண்டு இது சம்பந்தமான நடவடிக்கையை எடுக்குமாறு கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி அமிர்தலிங்கம் அவர்களுக்கு விடுத்த பணிப்புரைக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரியாலை கிழக்கு, பூம்புகார், நாவற்காடு ஆகிய பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதுடன், அங்கு விவசாய நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன. இவற்றிற்கு இடையூறாக கட்டாக்காலி கால் நடைகளின் நடவடிக்கைகள் அமையும் என்பதன் காரணமாகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (பா)

# வாகனச் சாரதிக்கு தண்டம்; சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பு

(சாவகச்சேரி)

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் வவுனியாவைச் சேர்ந்த ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை, குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிவான் குறித்த நபருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் செலுதுமாறும், செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒருமாத சாதாரண சிறைத தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (11)

## பாலஸ்தானம்

(வடமராட்சி)

பருத்தித்துறை-புலோலி வடக்கு பன்னம்பதி வீரகத்தி விநாயகர் ஆலயம் 3 வருடங்களின் பின்னர் பாலஸ்தானம் செய்யப்பட்டு வருகின்றது.

நீண்ட பல வருடங்களாகக் கைவிடப்பட்ட நிலையில் இருந்த இவ் ஆலயம், தற்போது திருப்பணிச் சபையினரால் புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாலய புனருத்தாரணப் பணிகளுக்கு உதவ விரும்புவோர் இலங்கை வங்கி 7065 6089 என்ற கணக்கு இலக்கத்துடன் தொடர்புகொண்டு உதவி செய்யலாம் என திருப்பணிச் சபையினர் அறிவித்துள்ளனர்.(100)

## விழிப்புணர்வூட்டும் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை ஸ்ரீ கணேச வாசிகசாலை-வாசகர் வட்டம் நடாத்தும் சமூக கலாசார மேம்பாட்டிற்கான விழிப்புணர்வூட்டும் கூட்டம் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு வாசிகசாலை கேட்போர் கூடத்தில் மு.க.மாசிலாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், தருமலிங்கம் சபாலிங்கம் “கலாசார மறுமலர்ச்சியும் பேராண்மையும்” என்னும் விடயம் பற்றியும், தி.நவநீதன் “கலாசார மேம்பாட்டில் ஆன்மீகத்தின் பங்கு” என்னும் தலைப்பிலும் சிறப்புரையாற்றவுள்ளனர்.

## தென்மராட்சியில் வீதி ஒழுங்கு அமுல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேசத்தில் உரிய ஆவணங்கள், தலைக்கவசம் இல்லாமல் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த நபரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்திய போது, வழக்கை விசாரித்த நீதிவான் குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதால், குறித்த நபருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் அபராதம் செலுத்தத் தவறின் ஒரு மாதகால சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டுமென அவர் உத்தரவிட்டார். (11)

தாழ்ந்தவர்கள் தங்களை உயர்வாக எண்ணிக் கொண்டு அதையே வெளியேயும் காட்டும்போது, உயர்ந்தவர்கள் சிரித்துக்கொண்டே ஒதுங்கிவிட வேண்டும்.

- கவிஞர் கண்ணதாசன்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாலான சேவை

நாடு தழுவிய ரீதியில் டெங்கு நோயின் அபாயத்தில் இருந்து மக்களைக் காப்பாற்ற சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளமை வரவேற்கக் கூடிய ஒரு நிகழ்ச்சித் திட்டமே.

நுளம்புப் பெருக்கமே இந்நோய் பரவுவதற்கான காரணம் என்றும், அதனைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் ஒருவார கால திட்டம் வகுத்து அதை சுகாதார அமைச்சு தற்போது செயற்படுத்தி வருகிறது.

இந்த ஒருவார காலத்துக்குள் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாமா? என்ற கேள்வி சாதாரண ஒவ்வொரு குடிமகனிடமும் எழுந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

தென்மேற்குப் பருவமழை விரைவில் ஆரம்பமாக இருப்பதால், நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்ப தற்கும், ஒழிப்பதற்குமான ஒரு முன்கூட்டிய நடவடிக்கையே தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நுளம்பின் தாக்கத்தினால், ஏற்கனவே மலேரியா, சிக்குன்குனியா நோய்களினால் பலர் உயிரிழந்துள்ளனர். அந்த உயிர்கொல்லி நோய்களின் வரிசையில் இப்போது டெங்கு நோய் எம்மக்களை வாட்டிவதைத்து வருகிறது.

அன்றாடம் மக்களின் சுகாதாரப் பழக்கவழக்கத்துடன், சுற்றுச்சூழலுடன் தொடர்புடைய நோய்களுக்கு கால அவகாசமோ, கால அட்டவணையோ தயாரித்து அவற்றைப் பிரகடனப் படுத்துவதன் மூலம் நுளம்புக் காவிநோய்களில் இருந்து எவரும் தப்பிக்க முடியாது.

நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் எந்த எந்த இடங்களை இனங்கண்டு எவரெவர்கள் மூலமாக செயற்படுத்தி வருகிறார்களோ அவர்கள் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடிய வகையில் பிரதேசத்தின் தன்மையை அடிப்படையாக வைத்துத் திட்டங்கள் வகுத்துச் செயற்பட வேண்டும்.

வெள்ளம் வரமுன் அணைகட்ட வேண்டும் என்பார்கள். அதேபோல் நுளம்புப் பெருக்கத்தினால் தான் டெங்குநோய் பரவுகிறது என்று கண்டறியப்பட்டுள்ளமையினால் சுகாதாரப் பகுதியினர் கவனம் செலுத்த வேண்டும்.

நிறுவன உரிமையாளர்களை பாடசாலை, சமூகம் வீட்டு உரிமையாளர்கள் பொது இடங்களின் பராமரிப்பாளர்கள், வாசஸ்தலங்களின் பரிபாலகர்கள், உட்பட்ட நாட்டு நலன்களின் அக்கறை உள்ள அனைத்துத் தரப்பினரும் தினமும் தங்கள் செயற்பாடுகளைத் தாங்களாகவே முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அதிகாரிகள் வருவார்கள், பார்வையிடுவார்கள் தண்டம் விதிப்பார்கள் என்ற பயப்பீதியில் எவரும் செயற்படாது, தங்கள் தங்கள் பாதுகாப்பிற்காக வேண்டிய அனைத்துச் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும்.

முன் கூட்டியே அறிவித்துவிட்டு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடவரும் அதிகாரிகளை ஏமாற்றும் வகையில் சுத்திகரிப்பு வேலைகள் கச்சிதமாக செய்து வைத்திருப்பார்கள்.

சுத்திகரிப்புப் பணிகள் யாவும் திருப்பதிகரமான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்பதை திடீர் பரிசோதனைகள் மூலம் கண்டறியக் கூடிய தாக இருக்கும். இதனை அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எந்தப் பணியையும் எவர் செய்யும்போதும் எமக்காகவே செய்கிறோம் என்ற நல்நோக்குடன் செய்ய முற்படும்போது எவருக்கும் எவரும் அஞ்சத் தேவையில்லை.

எனவே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சுத்தத்தைக் கருத்திற்கொண்டு செயற்படுவார்களேயானால் எந்த வகையான உயிர்கொல்லி நுளம்பினையும் அழித்தொழித்து சுகதேகிகளாக வாழலாம்.

இத்தகைய சுகவாழ்வுக்கு சுகாதாரப் பகுதியினரின் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் சேவை செய்ய முன்வர வேண்டும்.

-ஆசிரியர்-

# யாழ்.போதனா வைத்தியசாலையை நவீனமயப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம்

## சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர்



(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் உள்ள பிரபல வைத்தியசாலைகளின் தரத்திற்கு யாழ்.போதனா வைத்திய சாலையையும் கொண்டு வரும் ஒரு நடவடிக்கையாகவே இன்று யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவும், கண்கிளினிக் பிரிவும் புனரமைக்கப்பட்டுத் திறந்துவைக்கப் பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்திய கலாநிதி மகிபால தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் புனரமைக்கப்பட்ட கண்கிளினிக் பிரிவைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக் கண்கிளினிக் பிரிவு திறந்து வைக்கப்படுவது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீண்டகாலம் புனரமைக்கப்படாமல் இங்கு இயங்கி வந்த கண்கிளினிக் பிரிவு ரூபா 25 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப் பட்டுள்ளதுடன், பல லட்சம் ரூபா பெறுமதியான கண்கிளினிக் சம்பந்தமான உபகரணங்களும் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் மூலமாக யாழ். போதனா வைத்தியசாலையை நவீன வசதிகள் கொண்ட வைத்தியசாலையாக மாற்றுவதுடன், தென்னிலங்கையில் உள்ள வைத்தியசாலைகளின் தரத்திற்கு உயர்த்துவதே எமது அமைச்சின் நோக்கமாகவுள்ளது எனவும் தெரிவித்தார். (பா)

# அனுமதியின்றி மணலை ஏற்றியவருக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதிப்பு

(சாவகச்சேரி)

அனுமதிப்பத்திரமன்றி பாலியாற்று மணலை ஏற்றி வந்த காரைநகரைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

மணலை ஏற்றிவந்த குறித்த நபரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை, குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து குறித்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும், அபராதத் தொகை செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறும் தீர்ப்பளித்ததுடன், வாகனத்தை 20 லட்சம் ரூபா பிணையில் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கினார். அத்துடன் மணலைப் பறிமுதல் செய்யுமாறும் அவர் உத்தரவிட்டார். (11)

# கணேசபுரம் வீட்டுத்திட்டத்தில் முறைகேடுகள்; பொதுமக்கள் விசனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கணேசபுரம் கிராமத்தில் வீட்டுத்திட்டம் வழங்குவதில் முறைகேடுகள் நிகழ்வதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இக்கிராமத்தின் வீடுகள் வழங்கப்படாது பல குடும்பங்கள் தறப்பாளினால் அமைக்கப்பட்ட தற்காலிகக் குடிசைகளில் வாழ்ந்து வரும் நிலையில், இறுதிப்போர் நடவடிக்கைக்கு முன்னரே கொழும்பு போன்ற தென்னிலங்கைப் பகுதியில் வசித்துவந்த குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலருக்கும் வீடுகள் வழங்கப்பட்டுள்ள போதும் தற்காலிக குடிசைகளில் மிகுந்த சிரமங்களுடன் வாழும் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்படாதது பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி முறையான வீட்டுத்திட்ட வழங்கலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (69)

# ஆனையிறவுக் கடல் நீரேரியில் இறால் பிடிப்பதற்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் ஆனையிறவு கடல் நீரேரி, கல்லாறு கலப்புக் கடல் நீரேரிகளில் கூடுகளைக் கட்டி இறால் பிடிப்பதற்கு கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நேற்று முதல் அனுமதி வழங்கியுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்திற்குப் பின்னர் குறித்த பகுதியில் மீள்குடியேறியுள்ள மக்களின் தொழில் துறையை அபிவிருத்தி செய்யும் முகமாக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனையிறவு கடல் நீரேரி மற்றும் கல்லாறு கலப்புக் கடலில் பிடிக்கப்படும் இறால் சுவை நிறைந்ததாகக் காணப்படுவதால் இறால்களை மொத்தமாக கொள்வனவு செய்வதற்குத் தென்னிலங்கை வர்த்தர்கள் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தில் பதிவு செய்துள்ளதாகவும், சங்கத்தில் பதிவு செய்யாதோர் இறால்களைக் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் கரைச்சி வடக்கு, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

# கடுகதி வேகத்தில் பேருந்துகள் அச்சத்தின் மத்தியில் பயணிகள்

(யாழ்ப்பாணம்)

கடுகதி வேகத்தில் பேருந்துகள் பயணிப்பதால், அச்சத்தின் மத்தியில் பயணம்செய்யவேண்டியுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது யாழ்ப்பாணத்தின் பெருமளவான வீதிகள் அகலமாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் நிலையில் பயணம் செய்வதற்கு இலகுவானதாக இருக்கின்றது.

அத்துடன் விபத்துக்களும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. வீதி அகலிப்பு என்பது எமக்கு நன்மைகளைத் தர வேண்டுமே தவிர, மக்களுக்குப் பாதகமாக அமையக்கூடாது என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் பயணிக்கும் பேருந்துகள் கடுகதி வேகத்தில் செல்கின்றமையால், குறித்த வீதியில் பயணிக்கும் போது உயிரைக் கையில் பிடித்த வண்ணமே பயணம் செய்ய வேண்டியுள்ளது.

ஒரே நேரத்தில் 05 பேருந்துகள் கலைபட்டுச் செல்கின்றன. இது விபத்துக்கு ஒரு காரணமாக அமைகின்றது. அத்துடன் தனியார் பேருந்துகளுக்கு வழங்கப்படுகின்ற நேரங்கள் குறைவானதாக இருப்பதால், அவர்கள் கடுகதி வேகத்தில் செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது.

அத்துடன் வீதி அகலிப்புச் செய்யப்பட்ட இடங்களில் வேகக்கட்டுப்பாட்டுக் குறியீடுகள் இன்மையும் அதற்கு ஒரு காரணமாகும். குறித்த வீதியில் இந்த வாரத்தில் மட்டும் மூன்று விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து அச்சமற்ற பயணத்திற்கு உதவவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)



யா.துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது வெற்றிபெற்ற வீராங்கனைக்கு பிரதம விருந்தினரும், பருத்தித்துறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளருமான பா.இரகுநாதன் பரிசில் வழங்குவதையும், அருகில் பாடசாலை அதிபர் சி.சிவனேசன் நிற்பதையும் காணலாம்.

# கைத்தொலைபேசிச் சீரழிவுகளில் இருந்து இளையோரை பாதுகாப்பது எமது கடமையாகும்!

## தேசிய கல்வி நிறுவன பிரதம செயற்திட்ட அதிகாரி தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

பாடசாலைகளில் ஊடகக் கல்வி தரம் 10,11 மாணவர்களுக்கு ஒரு தெரிவுப்பாடமாக இருக்கின்ற போதிலும் ஊடகக் கல்வியை கற்கும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்காத சூழ் நிலையில் ஆசிரியர்கள் ஊடகம தொடர்பான அறிவினை பாடதுக்குப் புறம்பான வகையில் எல்லா மாணவர்களுக்கும் வழங்க முன்வர வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் ஊடகக் கல்வியை முன்னெடுக்கவுள்ள ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய கல்வி நிறுவக ஊடகக் கல்வி பிரதம செயற்திட்ட அதி காரி பந்துல பி.தயாரட்ண குறிபபிட்டார்.

யாழ்.இந்துமகளிர் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஆசிரியர் வளநிலையத்தில் ஆசிரிய வளநிலைய முகாமையாளர் எஸ்.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் செயற்திட்ட அதிகாரி தொடர்நது பேசுகையில்:

இன்றைய நவீன விஞ்ஞான தொழில்நுட்ப தொடர்பாடல் யுகத்தில் சமூக மாற்றங்களுக்கேற்ப மாணவர்களின் நடத்தைக் கோலங்ளும் மாற்றமடைந்து வருகின்றது.

மாணவர்களை நல்வழிப் படுத்துவதில் பெற்றோர், ஆசிரியர், சமூகம், பாடசாலை, சமயம், அரசியல், ஊடகம் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன.

இன்று இளைய தலைமுறையினரைத் தவறான பாதைக்குள் இட்டுச் செல்லக் கூடிய அனைத்துக் காரணிகளும் கைக்குள் அடங்கி விட்டன. கைத்தொலைபேசிகள் பல்லூடகக் கருவிகளாகத் தொழிற்படுகின்றன. பல்லூடக கைத்தொலைபேசிகள் இளைய தலைமுறையினரால் கதைப்பதற்குப் பயன்படுவதை விட வேறு தேவைகளுக்கே அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது.

எமக்குப் பல வசதிகளையும் நன்மைகளையும் அளிப்பதற்காக உருவாக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் இன்று எமது இளம் தலைமுறையினரின் சீரளிவுக்கும காரணமாகியுள்ளது. இத்தகைய சீரழிவுகள் ஏற்படாது பாதுகாத்துக் கொள்வது பெற்றோர், ஆசிரியர் கடமையாகும்.

திருடன் வந்து விடுவான் என்பதற்காக நாம் வீட்டைப் பூட்டி வைக்கிறோம். பூட்டிய வீட்டுக்குள் எமது கலாசாரப்பணபாடுகளைச் சீரழிக்கும் திருடனாக நடுவீட்டுக்குள் வந்து குந்திவிடுகிறது தொலைக் காட்சி.

கைத்தொலைபேசி, தொலைக காட்சி, சினிமா, இணையம் போன்ற ஊடகங்களில் தீய விடயங்களைப் பகுத்துக்காட்டி நல்லவற்றை மட்டும் கைக்கொள்வதற்கு எமது பிள்ளைகளைப் பழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று ஊடகங்கள் கலாசாரப் பாரம்பரியங்கள் சிதைவடைவது பற்றிச் சிந்திக்காது முழுமையான வர்த்தக நோக்கத்துடனேயே இயங்குகிறது. நல்ல ஊடகங்களைத் தெரிவு செய்து பிள்ளைகளுக்கு வழங்குவது ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் கடமையாகும். (10)

## பட்டிமன்றப் போட்டி முடிவுகள்

(கொக்குவில்)

யாழ்.பிரதேச செயலக மகளிர் அபிவிருத்திப் பிரிவால் சர்வதேச மகளிர் தினத்தையொட்டிப் பட்டிமன்றப் போட்டிகள் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்டது.

பல்வேறு தலைப்புக்களில் நடத்தப்பட்டு இறுதிச் சுற்றுக்குத் தெரிவான பாடசாலைகள் இடையே "பாரதி கண்ட புதுமைப்பெண் தோன்றி விட்டாள் எதிர் தோன்றவில்லை" எனும் தலைப்பில் இடம்பெறறது.

மேற்படி போட்டியில் கலந்து வெற்றி பெற்றுள்ள பாடசாலைகளின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முதலாம் இடம்: யாழ்.மத்தியகல்லூரி, 2 ஆம் இடம் யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி, 3 ஆம் இடம் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி.

மகளிர் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகளின் முடிவுகள் வெளிவந்ததும் யாழ்.செயலகத்தால் நடத்தப்படவுள்ள மகளிர் தின நிகழ்வுகளின் போது பரிசுகள் வழங்கப்பட உள்ளன. (68)

## பண்ணிசைப்போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப்பாடசாலையில் தரம் 10,11 இல் கல்விகற்கும் மாணவர்களிடையே நடத்தப்பட்ட சைவசமய பண்ணிசைப் போட்டியில் சி.பிறிஸ்லா (மீசாலை வீரசிங்கம்) முதலாம் ஆம் இடத்தையும், க.தனோசா (மிருசுவில் அ.த.க) 2 ஆம் இடத்தையும், அ.சிந்துஜா (உசன் இராமநாதன்) 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். சிறப்புத் தேர்ச்சியினை ஜீ.தஸ்சியா (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதயா), ஜெசுீனா (சா.மகளிர் கல்லூரி), செ.பவித்திரா (கச்சாய் அ.த.க) வும், சாதாரண தேர்ச்சியை செ.பாமினி, (வரணி ம.வித்தியாலயம்) த.விமலினி (அல்லாரை அ.த.க.பாடசாலை) சி.கீர்த்தனா (கைதடி முத்துக்குமாரசாமி) மாணவிகளும் பெற்றுள்ளதாகவும் அவர்களைப் பாராட்டுவதாகவும் வலயக்கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்தார். (11)

## மின்வெட்டு

(சுன்னாகம்)

மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் கொருட்டு இன்று காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை புத்தூர், வாதராத்தை, வீரவாணி, ஆவரங்கால், ஊறணி ஆகிய இடங்களிலும் 27.03.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை கொட்டடி, நாவாந் துறை, மீனாட்சிபுரம், காக்கை தீவு, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை. சிறுவிளான், வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின விநியோகம் தடைப்பட்டிருக்கும். என் அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருப்பணி வேலைகள்

(வவுனியா நிருபர்)

ஏ 9 வீதியில் புளியங்குளத்தில அமைந்துள்ள முத்துமாரி அம்மன் ஆலய புனருத்தாரண திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றது.

யுத்தம் நிறைவு பெற்றுள்ள நிலையில் ஆலய திருப்பணி வேலைகளை பூர்த்தி செய்து மகாகும்பாபி ஷேகத்தை நடத்த பரிபாலன சபையினர் திட்டமிட்டுள்ளனர்.

## தீவக வலய பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பெருவிளையாட்டுக்கள், உள்ளக விளையாட்டுப் போட்டி முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் முறையே:

பெருவிளையாட்டுக்கள் (ஆண்கள்)

கரப்பந்தாட்டம் , 15 வயது பிரிவு - சென். அன்ரனிஸ் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, வேலணை மேற்கு நடராஜா. 17 வயதுப்பிரிவு - சென்.அனரனிஸ், நயினாதீவு கணேசா, யா/யாழ்ரன் கல்லூரி. 19 வயதுப் பிரிவு - யா/யாழ்ரன் கல்லூரி, யா/நயினாதீவு கணேசா, வேலணை மத்திய கல்லூரி. வலைப்பந்தாட்டம், 15 வயதுப் பிரிவு - யா/புங்குடுதீவு சுப்பிரமணியம், யாழ்/யாழ்ரன் கல்லூரி, யா/வேலணை மத்திய கல்லூரி, 17 வயது பிரிவு - யா/யாழ்ரன் கல்லூரி, யா/புங்குடுதீவு சுப்பிரமணிய கல்லூரி, யா/வேலணை மத்திய கல்லூரி. 19 வயதுப் பிரிவு - யா/யாழ்ரன் கல்லூரி, நயினாதீவு கணேசா மகாவித்தியாலயம், யா/புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயம்.

கரப்பந்தாட்டம்

பெண்கள்

கரப்பந்தாட்டம் 15 வயதுப் பிரிவு - மண்டைதீவு மகாவித்தியாலயம், நெடுந்தீவு றோ.க வித்தியாலயம், வேலணை மேற்கு நடராஜா. 17 வயதுப் பிரிவு - நெடுந்தீவு றோ.க வித்தியாலயம், வேலணை மேற்கு நடராஜா, நயினாதீவு கணேசா மகாவித்தியாலயம். 19 வயதுப் பிரிவு சென். மேரிஸ் றோ.க. மகளிர் கல்லூரி, கரம்பொன் சிறிய புஸ்பம் மகளீர், காரை சுந்தர மூர்த்தி,

துடுப்பாட்டம்

பெண்கள் - புங்குடுதீவு மகாவித்தியாலயம், மண்டைதீவு மகாவித்தியாலயம், யா/சென் மேரிஸ் றோ.க மகளிர்

. ஆண்கள்


புனித அந்தோனியார் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, Dr. தியாகராஜா ம.ம.வி

உள்ளக விளையாட்டுக்கள (ஆண்கள்)

சதுரங்கம் 15 வயதுப்பிரிவு - முதலாம் இடம் யா/வேலணை மேற்கு நடராஜா, 2 ஆம் இடம் யா/சென் அன்ரனிஸ் கல்லூரி, 3 ஆம் இடம் யா/வேலணை மத்திய கல்லூரி. 19 வயதுப் பிரிவு - முதலாம் இடம் யா/வேலணை மத்திய கல்லூரி, 2 ஆம் இடம் யா/தியாகராஜா மகாவித்தியாலயம், 3 ஆம் இடம் யா/சென் அன்ரனிஸ் கல்லூரி. 19 வயதுப் பிரிவு (பூப்பந்தாட்டம்) - முதலாம் இடம் புனித அந்தோனியார் கல்லூரி, மேற்கு நடராஜா வித்தியாலயம் 3 ஆம் இடம் தியாகராஜா. 19 வயது பிரிவு (கரம்) - முதலாம் இடம் சென். அன்ரனிஸ் கல்லூரி, 2 ஆம் இடம் சண்முகநாதன், 3 ஆம் இடம் வேலணை கிழக்கு. 15 வயது (கரம்) - 1 ஆம் இடம் கரம்பன் சண்முகநாதன், 2 ஆம் இடம் வேலணை மேற்கு, 3 ஆம் இடம் அன்ரனிஸ் கல்லூரி.

உள்ளக விளையாட்டுக்கள (பெண்கள்)

15 வயதுப்பிரிவு (சதுரங்கம்) - முதலாம் இடம் யா/னுச தியாகராஜா ம.வி, 2 ஆம் இடம் வேலணை மத்திய கல்லூரி, 3 ஆம் இடம் யா/புனித மரியாள் கனிஸ்ர, 19 வயது பிரிவு (சதுரங்கம்) - முதலாம் இடம் யா/Dr. தியாகராஜா ம.வி, 2 ஆம் இடம் யா/வேலணை மேற்கு நடராஜா, 3 ஆம் இடம் யா/வேலணை மத்திய கல்லூரி. 19 வயதுப் பிரிவு (பூப்பந்தாட்டம்) - முதலாம் இடம் வேலணை மேற்கு நடராஜா 2 ஆம் இடம் புனித அந்தோனியார், 3 ஆம் இடம் வேலணை மத்திய கல்லூரி. 15வயது (கரம்) - முதலாம் இடம் யா/சென்.மேரிஸ், 2 ஆம் இடம் யா/வேலணை மத்திய கல்லூரி, 3 ஆம் இடம் யா/வேலணை மேற்கு நடராஜா கல்லூரி. 19 வயதுப்பிரிவு (கரம்) - முதலாம் இடம் யா/வேலணை மத்திய கல்லூரி, 2 ஆம் இடம் புனித அந்தோனியார், 3 ஆம் இடம் யா/வேலணை மேற்கு நடராஜா (65)



பாரம்பரிய நாட்டுப்புற இசை வடிவங்களின் கொண்டாட்ட நிகழ்வுகள் நேற்று யாழ்.மாநகரசபையின் சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாகவுள்ள மைதானத்தில் மிகவும் கோலாகலமாக ஆரம்பமாகியது. ஆரம்பநிகழ்வுகளின் சில பதிவுகள்.... படம்:பார்த்தீபன்

# சிகை ஒப்பனையாளர்கள் விதிமுறைகளுக்கு அமைவாக தமது நிலையங்களை நடத்த வேண்டும்

(கொக்குவில்)

விடுமுறைத் தினங்கள் மற்றும் நாளாந்த தொழில் செய்யும் நேரங்களில் கட்டுப்பாடுகள் பேணல், பரந்த மட்டத்தில் ஒரே மாதிரியாகக் கட்டணங்கள் அறவிடல் ஆகிய விடயங்களில் நிர்வாகக் கட்டமைப்பு விடுக்கும் விதிமுறைகளுக்கு அமைவாக நடந்து கொள்வதன் மூலமாக ஒரே மாதிரியான ஒழுங்குகளில சிகை ஒப்பனை நிலையங்களை நடத்திச் செல்லக் கூடியதாக அமையும்.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பத்மநாபா பிரிவைச் சேர்ந்த தோழர் கே.சிவராசா மோகன் தெரிவித்தார்.

சங்கத் தலைவர் அ.அல்பேட் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்தும் அவர் பேசுகையில் கூறியதாவது-

சங்கத்துக்கு இடையூறு செய்து, ஒத்துழையாமல் குழப்பம் விளைவிப்பதால் எங்களுக்கு நாமே தீங்கினைத் தேடிக் கொள்வது போன்ற செயற்பாடுகளில் அங்கத்தவர்கள் ஈடுபடாமல் நடந்து கொள்ள வேண்டும். அப்பொழுதே ஒரு நல்ல சமுதாயம் உருவாக வழிபிறக்கும் என்றும் அவர் கூறினார்.

சங்க உபதலைவர் கி.இரத்தினராசா பேசுகையில், சரித்திரப் பிரசித்திபெற்ற குடாநாட்டு இடப்பெயர்வின் பின்பாக திரும்பியிருந்த நாம் எமது சங்கத்தைச் சிறப்பாகக் கட்டியெழுப்பி இருந்தோம். அதன் பின்பாக ஏற்பட்ட மாற்றங்களின் போது அமைந்த நிர்வாகச் சீர்கேட்டால் சங்கத்துக்குரிய ஒரு லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த தளபாடங்கள், பணம் மற்றும் உபகரணங்கள் சுயநல சந்தர்ப்பவாதிகளின் சூறையாடலால் இழந்து போயுள்ளது என்றார்.

காப்பாளர் த.பரமலிங்கம் பேசுகையில்-

ஞாயிறு விடுமுறையை எந்தத் தனிமனிதனாலும் மாற்ற முடியாது. சங்க யாப்பில் கூறப்பட்டுள்ளது போன்று முறைப்படி பிரேரித்து வாக்களிப்பில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நிரூபித்தே மாற்ற முடியும். எமது தாய்ச் சங்கம் 2005 ஆம் ஆண்டில் இதனை ஏகமனதாக நிறைவேற்றியிருந்தது.

அதனால் எங்களுக்கு விடுமுறை விடயத்தில் எந்தவிதமான தடுமாற்றத்துக்கும் இடமில்லை. வடமராட்சி, தென்மராட்சிக் கிளைகள் எதிர்மாறாகச் செயற்பட்டு வருகின்றன. அவை சார்பாக இன்று வருகை தந்த பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கை படுதோல்வியில் முடிவடைந்துள்ளது. ஆகவே அவர்களும் ஞாயிறு விடுமுறையைக் கைக்கொள்ள முனவர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதுவரையில் நடைமுறையில் இருந்து வந்த அங்கத்தவர்களுக்கான மரணக் கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபா புதிய நிர்வாகத்தால் 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புதிய நிர்வாகிகளாகக் கீழ்க் காண்போர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்-த.பரமலிங்கம், தலைவராக-அ.அல்பேட், உபதலைவராக-கி.இரத்தினராசா, செயலாளராக-செ.ஸ்ரீராஜன், உபசெயலாளராக-வீ.சிறிராசன், பொருளாளராக-சி.அ.சிவலிங்கம ஆகியோரும், 15 பேர்கள் அடங்கிய நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (68)

# புதிய நியமனம்

(வேலணை)

தீவக கல்வி வலயத்தின் செயற பாடுகளை விரிவுபடுத்தும் நோக்கத்திற்கு அமைவாக இரண்டு புதிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை கல்விக்கோட்ட அதிகாரியாக இருந்த ச.பாஸ்கரன் மாணவ அபிவிருத்திக்கான பணிகளை மேற்கொள்வதற்கான பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும், வேலணை மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிவந்த பொ.அருணகிரிநாதன் கல்வி முகாமைத்துவத்தின் பணிகளை மேற்கொள்வதற்கான பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்படி இருவரும் பதவி உயர்வுபெற்று இடமாற்றலாகிச் சென்றுள்ளதால் இருவரினது இடங்களும் வெற்றிடமாக இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# இன்றுமுதல் ஓமந்தை வரை புகையிரத சேவை

(வவுனியா நிருபர்)

ஓமந்தை ரயில் நிலையம் வைபவ ரீதியாக இன்று திறக்கப்படும்.

யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட இந்த நிலையம் புனரமைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கொழும்பிலிருந்து தாண்டிக்குளம் வரை நடைபெற்று வருகின்ற ரயில் சேவைகள் இன்றுமுதல் ஓமந்தை வரை நீடிக்கப்படும் என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

வவுனியாவிலிருந்து இதுவரை காலமும் பி.ப.3.30 மணிக்கு கொழும்பிற்குப் புறப்பட்ட யாழ். தேவி ரயில் சேவை ஒரு மணித்தியாலம் முந்தி 2.30 மணிக்குப் புறப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஓமந்தை புகையிரத நிலையம் திறக்கப்பட்டதும் கொழும்பிறகான அனைத்துச் சேவைகளுமு அங்கிருந்து ஆரம்பிக்கப்படும். (39)

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் கலந்து கொள்வார்.

இக்கூட்டத்தில் அனைத்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சமுகம் தருமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார். (104)

# மணிக்கூட்டு வீதி வடிகால்களின் மூடிகள் உடைவு; விபத்து அபாயம்

(கொக்குவில்)

யாழ்.மணிக்கூட்டு வீதியில் பழைய அஞ்சல் திணைக்களத்திற்கு முன்பாக வீதிக்கு நடுவே அமைக்கப்பட்டிருக்கும் வடிகாலை மூடிப்போட்டுள்ள கற்களின் இடையில் தோன்றியுள்ள துவாரங்களால் பாரிய வீதி விபத்துக்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

அனர்த்த காலங்களுக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்ட மேற்படி மதகின் பாதுகாப்பு மூடி பழுதடைந்து நீக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

அந்த நீக்கல்களின் இடையில் சைக்கிள் சில்லுகள் அகப்பட்டால் பயணிக்கும் நபருக்கு உயிராபத்து விளையும் அபாயம் இருந்து வருகிறது.

பல வருடங்களுக்கு மேலாகச் சம்பந்தப்பட்டவர்கள் இம் மதகைப் பாராமுகமாகவே இருந்து வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (68)

## ஆதினியின் இன்றைய பலன்

(26.03.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 12
இராகுகாலம் 9.15 - 10.45,
சுப நேரம் 3.15 - 4.45,
ஸப்தமி மு.ப.11.51,
மூலம் பி.இ.2.25, சித்தம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** தனவருகை, மனமகிழ்ச்சி, பொருட்சேர்க்கை.

**ரிஷபம்:–** நற்செயல், தானதர்ம விருப்பு, பெரியோரை மதித்தல்.

**மிதுனம் :–** குடும்ப மகிழ்ச்சி, ஆதாயம், தொழிலில் விருத்தி.

**கடகம்:–** காரியத் தடை, விபத்து, நண்பர் பகை.

**சிம்மம்:–** வீண் பிரச்சினை, மனமுறிவு, பகை அதிகரித்தல்.

**கன்னி :–** காரிய அனுகூலம், தற்பெருமை பேசல், தனவரவு.

**துலாம் :–** ஏமாற்றப்படல், காரியத் தடை, நண்பர் பகை.

**விருச்சிகம்:–** தெய்வீக நினைவு, மனதில் அமைதி, கௌரவம் உயர்வு.

**தனுசு:–** காரியத்தடை, மனமுறிவு, அச்சமான நிலை.

**மகரம்:–** உதவிகள் சேரல், பெரியோர் ஆசி, நல்லோர் உதவி.

**கும்பம் :–** வீண்பிரச்சினை, அமைதிக் குறைவு, பகை அதிகரிப்பு.

**மீனம்:–** வருவாய் அதிகரிப்பு, கொண்டாட்டம், தேகநலன் விருத்தி.

# வடமராட்சி கிழக்கில் அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பித்து வைப்பு

(வடமராட்சி கிழக்கு)

பொருளாதார அமைச்சு, வடக்கின் வசந்தம் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு கட்டடம் மற்றும் தங்கும் விடுதிகள் அமைத்தல், வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம் அமைத்தல் என்பவற்றுக்கு நிதி ஒதுக்கப்பட்டு கட்டட வேலைகள் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றன.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக் கட்டடம் அமைப்பதற்கு 356 லட்சத்து 653 ஆயிரம் ரூபாவும் வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகக் கட்டடம் அமைப்பதற்கு 35 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்துடன் வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தலைமைப் பணிமனை, தாளையடி றோ.க.த.க. பாடசாலைக்கு இரண்டு மாடிக் கட்டடம் அமைப்பதற்கு நிதி ஒதுக கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. (70)

# அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமான ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக ஒப்பந்தகாரர்களுடனான கூட்டமொன்று யாழ்.மாநகர சபை பொதுநூலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.


இக்கூட்டத்தில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டு அபிவிருத்தி வேலைத திட்டங்கள் குறித்து ஆராய்ந்தார்.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நீர்ப்பாசனம், வீதி, கட்டடங்கள் போன்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக ஒப்பந்தகாரர்கள், திணைக்களத் தலைவர்கள் அவ்வேலைகளை மேற்பார்வை செய்யும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் ஆளுநர் கலந்துரையாடினார்.

அத்துடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் பற்றியும் அவர் கேட்டறிந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் வடமாகாணத்தைச் சேர்ந்த சகல திணைகளத் தலைவர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், ஒப்பந்தகாரர்கள், பாடசாலை அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (100)





பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது சான்றிதழ் வழங்குவதையும், வெற்றிக்கேடயம் வழங்குவதையும் காணலாம்.

# சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம்



(கொழும்பு)

எங்களுக்கு நெருக்கடி இருந்தாலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம் என இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோஸ் தெரிவித்தார்.

இன்று நடைபெறவுள்ள நான்காவது காலிறுதிப் போட்டியில் இலங்கை அணியை இங்கிலாந்து அணி எதிர்கொள்ளவுள்ளது.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: யார்டி திடீரென விலகியது அதிர்ச்சியே. அது அவரின் தனிப்பட்ட முடிவு. இலங்கை அணி சிறப்பான ஆட்டத்திறனுடன் உள்ளது. சொந்த மண்ணில் விளையாடுவதால் ரசிகர்களின் ஆதரவு அவர்களுக்கு அதிகம் இருக்கும் என்று நம்புகின்றோம். லீக் சுற்றில் எங்களது ஆட்டம் திருப்திகரமாக அமையாது போனாலும், அடுத்து வரும் போட்டிகளில் மிக முக்கியமானதே. இந்த வகையில் காலிறுதிப் போட்டியில் நாங்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. இதற்காக நாம் ஒருங்கிணைந்து செயற்படுவோம் என்றார்.

# சாதகமாக அமையும் ஆடுகளம்



(கொழும்பு)

கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கில் இன்று நடைபெறவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் ஆடுகளம் எமக்கு சாதகமாக அமையும் என இலங்கை அணியின் அணித் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இன்று நடைபெறவுள்ள போட்டியில் எமது வீரர்கள் முழுத் திறமையுடன் விளையாட மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள். மேலும் ஆடுகளம் எமக்கு சாதகமாக அமையும் என எதிர்பார்க்கிறோம்.

பலம்வாய்ந்த அணிகளில் ஒன்றாக இங்கிலாந்து விளங்குவதால் சவாலான போட்டியாக இது காணப்படும். எனவே இப் போட்டியில் முரளிதரனின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

இந்நிலையில் எமது மத்திய தர வரிசை துடுப்பாட்ட வீரர்கள் தன்னம்பிக்கையுடன் விளையாடி வருகிறார்கள். எனவே இப்போட்டியிலும் தமது திறமையை வெளிப்படுத்துவார்கள் எனத் தெரிவித்தார்.

# சீர்குலைக்கச் சதி; பயங்கரவாதி கைது

உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டியை சீர்குலைக்க சதி செய்த பயங்கரவாதி ஒருவன் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டுள்ளான். பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக், பயங்கரவாதி கைது செய்யப்பட்டுள்ள தகவலைத் தெரிவித்தார்.

உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டியை சீர்குலைக்க தலிபான் பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளதாகவும் இந்தியாவை எச்சரிக்கையுடன் இருக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கிடையில் இன்டர்போல் பொலிஸார் மேலும் ஒரு பயங்கரவாதியை கைது செய்துள்ளனர். முகமது இக்பால் என்ற அந்தப் பயங்கரவாதி பாகிஸ்தானில் இருந்து மாலைதீவுக்கு இலங்கை வழியாக செல்லும் போது கைது செய்யப்பட்டுள்ளான்.

# பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்




(இஸ்லாமாபாத்)

அரையிறுதிப் போட்டியில் பங்கேற்க இந்தியா செல்லும் வீரர்களுக்கு ஐ.சி.சி., அதிகபட்ச பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி.,) வேண்டுகோள் விடுத்துள்ளது.

உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டியில் பங்கேற்க, மூன்று ஆண்டுகளுக்குப் பின் இந்தியா செல்கிறது பாகிஸ்தான் அணி.

இவர்களுக்கு மும்பை சிவசேனா கட்சி சார்பில், ஏற்கனவே மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகம், ஐ.சி.சி.யிடம் முறையிட்டுள்ளது. அதில், 2008 மும்பைத் தாக்குதலுக்குப் பின், எங்கள் அணி இந்தியா செல்லவில்லை. இதனால் அரையிறுதியில் பங்கேற்கும் வீரர்களுக்கு அதிக பட்ச பாதுகாப்பை ஏற்பாடு செய்து, எவ்வித சிக்கலும் இல்லாமல் விளையாட உதவி செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யார்டி திடீர் விலகல்



(கொழும்பு)

மன அழுத்தம் காரணமாக இங்கிலாந்து வீரர் மைக்கேல் யார்டி உலகக் கிண்ணப் போட்டித் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

யார்டிக்குப் பதிலாக சுழற் பந்து வீச்சாளர் அடில் ரஷூத்தைச் சேர்க்க இங்கிலாந்து கிரிக்கெட் சபை சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐசிசி) தொழில்நுட்பக் குழு அனுமதி அளித்துள்ளது.

அவர் கொழும்பில் இருந்து இங்கிலாந்துக்கு புறப்பட்டுச் சென்றுவிட்டார். இவர் இந்த உலகக் கிண்ணத்தில் 3 ஆட்டங்களில் விளையாடினார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், உலகக் கிண்ணத் தொடரின் காலிறுதியை எட்டியுள்ள நிலையில், விலகியது கடினமான முடிவுதான். என்னைப் பொறுத்தவரையில் இது சரியான முடிவு. காலிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து அணி சிறப்பாக விளையாட எனது வாழ்த்துக்கள் என்றார்.




# ரசிகர்கள் குவிந்ததால் சரிந்தன தடுப்புக் கட்டைகள்

(சென்னை)

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடருக்கான டிக்கெட் வாங்க ரசிகர்கள் குவிந்ததால் தடுப்பு கட்டைகள் சரிந்தன.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான டிக்கெட் விற்பனை சென்னையில் நேற்று முன்தினம் முதல் தொடங்கியது. டிக்கெட் வாங்க ரசிகர்கள் கூட்டம் அலை மோதியதால் அங்கிருந்த தடுப்புக் கட்டைகள் சரிந்தன.

10 அணிகள் கலந்து கொள்ளும் நான்காவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 8ஆம் திகதி முதல் மே 28ஆம் திகதி வரை பல்வேறு நகரங்களில் நடைபெறுகிறது.

இதில் ஏப்ரல் 8ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நடைபெறும் முதல் ஆட்டத்தில், சென்னை சூப்பர் கிங்ஸ்-கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன.

இந்த ஆட்டத்துக்கான டிக்கெட் விற்பனை சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு தொடங்கியது. டிக்கெட் வாங்க ரசிகர்கள் அதிக அளவில் திரண்டனர். நீண்ட வரிசையில் நின்று டிக்கெட் வாங்குவதற்கு வசதியாக தடுப்பு கட்டைகள் மூலம் பாதை அமைக்கப்பட்டு இருந்தது.


ஆனால் ரசிகர்கள் வரிசையாக டிக்கெட் வாங்க காத்து நிற்காமல் முண்டியடித்து டிக்கெட் வாங்க முயற்சி மேற்கொண்டனர். இதனால் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு, ரசிகர்கள் மத்தியில் இழுபறிநிலை ஏற்பட்டது.

தேர்தல் நேரம் என்பதால் பாதுகாப்புக்கு போதிய அளவு பொலிஸார் இல்லாததால் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் தடுமாறினார்கள். சிறிது நேரத்தில் தகவல் அறிந்து அதிக அளவில் வந்த பொலிஸார் கூட்டத்தை சிறிய தடியடி நடத்தி ஒழுங்குபடுத்தினார்கள்.




டிக்கெட் விற்பனை அமோகமாக நடைபெற்றது. குறைந்த விலை டிக்கெட்டுகளுக்கு அதிக கிராக்கி இருந்தது. ரூ.500, ரூ.1,200, ரூ.2000 டிக்கெட்டுகளும் ஒரே நாளில் விற்றுத் தீர்ந்தன. அதிக விலை டிக்கெட்டுகளான ரூ.2,500, ரூ.3,000, ரூ.4,000, ரூ.5,000, ரூ.8,000, ரூ.15,000, ரூ.25,000 ஆகியவை விற்பனைக்கு உள்ளன.

# ஓய்வுபெறும் எண்ணமில்லை




(அகமதாபாத்)

ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறும் திட்டம் என்னிடம் இல்லை. இருப்பினும் இதுதான் எனது கடைசி உலகக் கிண்ண்ணத் தொடர் என அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி லீக் ஆட்டத்திலும், இந்தியாவுக்கு எதிரான கால் இறுதியிலும் தோற்றோம். கால் இறுதியில் ஏற்பட்ட இந்தத் தோல்வி மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. நாங்கள் 20 ஓட்டங்கள் வரை குறைவாகவே எடுத்து விட்டோம். 250 அல்லது 260 ஓட்டங்கள் என்பது நல்ல நிலைதான். பந்து வீச்சிலும், துடுப்பாட்டத்திலும் இந்திய வீரர்கள் சிறப்புடன் செயற்பட்டனர்.

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை பலம் பெற்றுக் காணப்படுகிறது. அரை இறுதியில் பாகிஸ்தானை இந்தியா வீழ்த்தும். ஒருநாள் போட்டியில் இருந்து நான் ஓய்வு பெற மாட்டேன். ஆனால் எனது கடைசி உலகக் கிண்ணத் தொடர் இது தான். உலகக் கிண்ணத் தொடரின் கடைசி ஆட்டத்தில் சதம் அடித்தது மகிழ்ச்சி தான். இந்திய அணி ஒருங்கிணைந்து விளையாடியது. சகீர்கானின் பந்து வீச்சு மிகவும் அபாரமாக இருந்தது என்றார்.

# இறுதிவரை பதற்றம்



(அகமதாபாத்)

அவுஸ்ரேலிய அணியுடனான போட்டியில் வெற்றிக்கான ஓட்டத்தை பெறும் வரை பதற்றம் இருந்தது. இந்த ஆட்டம் சிறப்பானது. அதைவிட முக்கியமானது உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பதே என அதிரடி வீரர் யுவராஜ்சிங் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

டோனி ஆட்டம் இழந்த போது எனக்கு அதிக பதற்றம் ஏற்பட்டது. மிகப் பெரிய இக்கட்டில் இருப்பதாக உணர்ந்தேன். இந்த நெருக்கடியை உணர்ந்து ஆடினேன். நானும் ரெய்னாவும் 30 ஓட்டங்கள் வரை ஜோடியாக நிலைத்து நின்றால் வெற்றி பெற முடியும் என்று கருதினோம். ஆனால் நாங்கள் இருவரும் கடைசி வரை நின்றோம். ஆட்டத்தில் ஏற்றம், இறக்கம் இருந்தபோது அதிகமான பதற்றத்துடன் தான் ஆடினேன்.

வெற்றிக்கான ஓட்டத்தைப் பெறும் வரை பதற்றம் இருந்தது. சிறிய தவறு செய்தாலும் போட்டியில் இருந்து வெளியேற்றப்படுவோம் என்பதை நாங்கள் தெரிந்து இருந்தோம். அவுஸ்ரேலியா போன்ற சிறந்த அணிகளுக்கு எதிராகக் கடைசி வரை நின்று வெற்றி பெற வைத்தது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது என்றார்.

# சரியான விடைகளை அனுப்பி பரிசில்களை அள்ளுங்கள்

எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிப் போட்டி தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான விடைகளை அனுப்பி பெறுமதியான பரிசில்களை அள்ளுங்கள்.

ICC Cricket World Cup 2011

1) உலகக் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?

2) இப்போட்டித்தொடரில், தொடர்நாயகன் விருதைப் பெறும் வீரர் யார்?

பெயர்: ....................

முகவரி : ....................

போ.இல : ....................

விடைகள் : 01) ....................

02) ....................


உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

தினமுரசு காரியாலயம்
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தினமுரசு விளம்பரப்பணிமனை
M.P.C.S. கட்டடம்
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

விடைகளை 01 ஆம் திகதக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

# துரத்துகிறது துரதிர்ஷ்டம் தென்னாபிரிக்கா “அவுட்”



(மிர்பூர்)

தென்னாபிரிக்க அணியை 49 ஓட்டங்களால் வீழ்த்திய நியூசிலாந்து அணி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்றுப் பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இப்போட்டியில் தென்னாபிரிக்க, நியூசிலாந்து அணிகள் மோதின.

ஆசிய ரசிகர்களுக்கு இப்போட்டி முக்கியம் மிக்கதாக இல்லாதபோதிலும், இரு நாட்டு ரசிகர்களுக்கும் பெரும் முக்கியமான ஆட்டமாக நிச்சயம் அமைந்திருக்கும். இதுவரை நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டித் தொடர்களின் இறுதிப் போட்டிக்கு இரு அணிகளும் தகுதி பெற்றிருக்காததே இதற்குக் காரணம்.

அணி என்ற அடிப்படையில் பலமான அணியாக தென்னாபிரிக்க அணி திகழ்ந்தாலும், நியூசிலாந்து அணிக்கு அனுகூலங்கள் இங்கு அதிகம் இருந்தது. இதற்குப் பயிற்சியாளர் ஜோன் ரைட் உட்பட உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் ஆசிய மண்ணில் அதிக போட்டிகளில் (பங்களாதேஷ், இலங்கை, இந்தியா நாடுகளில்) ஆடிய அனுபவம் கைகொடுக்கும் என்று நம்பப்பட்டது. விட்டோரியும் இந்த அனுபவங்கள் உலகக் கிண்ணத் தொடரில் கைகொடுக்கும் என தெரிவித்தும் இருந்தார்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சிகரமாக அமைந்தது. ஐந்து ஓட்டங்களைப் பெற்ற வேளை, முதலாவது விக்கெட்டையும், 16 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை, இரண்டாவது விக்கெட்டையும் இழந்து தடுமாறியிருந்தது. இந்நிலையில் இணைந்த ரைடர், ரெய்லர் இணை நியூசிலாந்தின் நிலையைக் கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றது என்றே கொள்ளப்பட்டது. இவர்கள் இருவரும் மூன்றாவது விக்கெட் இணைப்பாட்டமாக 114 ஓட்டங்களைப் பெற்றனர். இறுதியில் நியூசிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களைப் 'பெற்றது. இதில் ரைடர் 83, ரெய்லர் 43, வில்லியம்ஸன் 38 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எம். மோர்கல் மூன்று, ஸ்ரெயின், இம்ரான் தாஹிர் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 222 ஓட்ட வெற்றியிலக்கு என்பது தென்னாபிரிக்க அணிக்கு இலகுவானதாக அமையும் என்றே பொதுவில் நம்பப்பட்டது. அத்துடன் உலகக் கிண்ணத் தொடரில் துரதிர்ஷ்டமான அணி என்ற பெயருக்கு முத்தாய்ப்பு இம்முறை வைக்கப்படும் என்றே பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக நெட்சன் ஓட்ட இலக்கு தென்னாபிரிக்க அணிக்கு இருந்தது என்பது போட்டியின் முடிவுக்குப் பின்னர் விளங்கியிருக்கும்.

இந்த வகையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, முதலாவது விக்கெட்டை எட்டு ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இழந்தது. இந்த நிலையில் இணைந்த அணித் தலைவர் ஸ்மித், ஜக்கலிஸ் ஜோடி மிக நிதானமாக ஆடி 61 ஓட்டங்களை இணைப்பட்டமாகப் பெற்றவேளை, ஸ்மித் ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த டி. வில்லியர்ஸ், கலிஸ் ஜோடி இணை நியூசிலாந்தை வீட்டுக்கு அனுப்பும் வகையிலேயே ஆடியது. ஆனால், நியூசிலாந்தின் பந்து வீச்சு மிகச் சிறப்பான முறையில் அமைந்தது. இதனால் இந்த ஜோடியும் 37 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 43. 2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்று, 49 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது. பந்து வீச்சில் ஜேக்கப் ஓரம் நான்கு, நேதன் மக்கலம் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஜேக்கப் ஓரம் தெரிவானார்.

இதேவேளை, இன்று நடைபெறும் காலிறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் நியூசிலாந்து அணி அரையிறுதிப் போட்டியில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இன்றைய ஆட்டம்

இலங்கை எதிர்
இங்கிலாந்து

மைதானம் : கொழும்பு
பகலிரவு ஆட்டம்

ICC Cricket World Cup 2011

## முதலாவது அரையிறுதி

30 - 03 - 2011

இந்தியா எதிர்
பாகிஸ்தான்

மைதானம் : மொகாலி
பகலிரவு ஆட்டம்

## தினமுரசு தென்னாபிரிக்கா எதிர் நியூசிலாந்து SCORE CARD

மைதானம் : டாக்கா   திகதி : 25-03-2011

நாணயச் சுழற்சி வெற்றி நியூசிலாந்து : முதலில் துடுப்பாட்டம்.

ICC Cricket World Cup 2011

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) எம்.ஜே. குப்ரில் | c போத்தா b ஸ்ரெயின் | 01 |
| 02) பிரன்டன் மக்கலம் | c&b பீற்றர்சன் | 04 |
| 03) ஜே.டி. ரைடர் | c sub இன்கிராம் b இம்ரான் தாஹிர் | 83 |
| 04) ரெய்லர் | c கலிஸ் b இம்ரான் தாஹிர் | 43 |
| 05) ஸ்ரைரிஸ் | b மோர்கல் | 16 |
| 06) வில்லியம்ஸன் | not out | 38 |
| 07) நேதன் மக்கலம் | c டுமினி b ஸ்ரெயின் | 06 |
| 08) ஜேக்கப் ஓரம் | b மோர்கல் | 07 |
| 09) விட்டோரி | b மோர்கல் | 06 |
| 10) வூட்கோட் | not out | 03 |
| 11) ரீ. சவுத்தி | | |
| உதிரிகள் | (b4, lb 4, w 6) | 14 |
| மொத்தம் | (8 W: 50 ஓவர்கள்) | 221 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) ஏ. அம்லா | c விட்டோரி b நேதன் மக்கலம் | 07 |
| 02) ஜீ. ஸ்மித் | c sub கௌ b ஓரம் | 28 |
| 03) ஜக் கலிஸ் | c ஓரம் b ரீம் சவுத்தி | 47 |
| 04) டி. வில்லியர்ஸ் | run out குப்ரில்/எம். மக்கலம் | 35 |
| 05) டுமினி | b நேதன் மக்கலம் | 03 |
| 06) டு. பிளெசிஸ் | c சவுத்தி b ஓரம் | 36 |
| 07) போத்தா | b ஓரம் | 02 |
| 08) பீற்றர்சன் | c மக்கலம் b ஓர ம் | 00 |
| 09) எல். ஸ்ரெயின் | c ஓரம் b நேதன் மக்கலம், | 08 |
| 10) எம். மோர்கல் | c sub கௌ b வூட்கோட் | 03 |
| 11) இம்ரான் தாஹிர் | not out | 00 |
| உதிரிகள் | (lb 2, w1) | 03 |
| மொத்தம் | (all out: 43.2 ஓவர்கள்) | 172 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| பீற்றர்சன் | 09 | 49 | 01 |
| ஸ்ரெயின் | 10 | 42 | 02 |
| போத்தா | 09 | 29 | 00 |
| மோர்கல் | 08 | 46 | 03 |
| இம்ரான் தாஹிர் | 09 | 32 | 02 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| நேதன் மக்கலம் | 10 | 24 | 03 |
| விட்டோரி | 10 | 39 | 00 |
| ரீம் சவுத்தி | 09 | 44 | 01 |
| ஜேக்கப் ஓரம் | 09 | 39 | 04 |
| வூட்கோட் | 5.2 | 24 | 01 |

49 ஓட்டங்களால் நியூசிலாந்து அணி வெற்றி.   ஆட்டநாயகன் : ஜேக்கப் ஓரம்


EDWARD MAKES (எட்வேட் மேக்கர்ஸ்)

Manufacturers Siddha Ayurvedic Medicine & Pharmaceuticals

* Pain Oil
* Vaza Syrup
* Red Ointment
* Minth Thylum
* Guru Sancheevi
* Mum Mathirai
* Gorochana Pills
* Kiranthi Mathirai
* Thooth Achgo Thylum
* Thres Koonthal Thylum

எட்வேட் தயாரிப்புக்கள் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

ICC Cricket World Cup 2011

T.P. 021 222 8171   (C/626)   63, Grusault Road, Chundukkuli, Jaffna.

# கேரளாவில் சோனியா பிரசாரம் தமிழ்நாட்டுக்கு வருவது சந்தேகம்




(சென்னை)

தமிழ் நாட்டில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபட வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சோனியா, ராகுலின் தமிழக சுற்றுப்பயணம் குறித்து இதுவரை எந்தத் தகவலும் அதிகாரபூர்வமாக வெளியிடவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழக சட்டசபைத் தேர்தல் அடுத்தமாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள நிலையில் மூத்த தலைவர்கள் அனைவரும் நேற்றுமுன் தினம் தங்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

தற்போது தமிழ் நாட்டில் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்கத் தொடங்கியிரக்கின்றது. தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து முதல்-அமைச்சர் கருணாநிதி, துணை முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு முழுவதும் பிரசாரத்தில் ஈடுபட முடிவுசெய்துள்ளதாகத தெரிவிக்கப்படுகின்றது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் ஆகியோரும் தொகுதி வாரியாகச் செல்கின்றனர்.

பா.ஜ.க. வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்ய அத்வானி, சுஷ்மா சுவராஜ் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் விரைவில் சென்னை வர உள்ளனர். அதுபோல காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்ய சோனியா, ராகுல் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சோனியா, ராகுலின் தமிழக சுற்றுப்பயணம் குறித்து இதுவரை எந்தத் தகவலும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை.

அவர்கள் இருவரும் தமிழ் நாட்டுக்கு பிரசாரம் செய்ய வருவது சந்தேகம்தான் என்று காங்கிரஸ் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராகுல்காந்தி கடந்த மாதம் தன் நண்பர்களுடன் சுற்றுலா சென்றிருந்தபோது, மலையேற்றத்தில் ஈடுபட்ட சமயத்தில் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவரை ஓய்வு எடுக்கும்படி வைத்தியர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.

இதனால் ராகுல் தமிழகம் வர வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது.சோனியா காந்தி கேரளாவில் நடைபெறவுள்ள தேர்தலுக்காக கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார்.அப்போது தமிழ்நாட்டுக்கு வர வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் அவர் எந்தெந்த நகரங்களுக்குச் செல்வார் என்று எந்தத் தகவலும் இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

பாதுகாப்புக் காரணங்களுக்காக சோனியாவின் சுற்றுப் பயண விபரம் ஓரிரு நாட்களுக்கு முன்புதான் அறிவிக்கப்படும் என்று கூறப்படுகிறது.




# தங்கபாலு வீட்டுக்கு முன்பாக காங்கிரஸ் மகளிர் அணி ரகளை

(சென்னை)

தி.மு.க கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகுதியில் தனது மனைவியை தேர்தல் வேட்பாளராக நிறுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காங்கிரஸ் கட்சியினர் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் தங்கபாலுவின் வீட்டிற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டதில் ஈடுபட்டனர்.

அடுத்தமாதம் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு மயிலாப்பூர் தொகுதி ஒதுக்கப்பட்டது. இந்தத் தொகுதியில் தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவின் மனைவி ஜெயந்தி போட்டியிடுகிறார். அதனால் ஆத்திரமடைந்து காங்கிரஸ் மகளிர் அணியினர் தங்கபாலு வீட்டுக்குள் நுழைந்து ரகளையில் ஈடுபட முயன்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதிக்கு வந்த பொலிஸார் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் அணியினரைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். அதனால் குறித்த பகுதியில் பதற்றம் நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# திருப்பதிக்கு தீவிரவாதிகள் மிரட்டல் இரும்புவேலிகள் அமைக்கத் திட்டம்

(சென்னை)

இந்தியாவில் உள்ள பிரசித்தி பெற்ற திருப்பதி ஏழுமலையான் கோவிலை தகர்க்க தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டி இருப்பதாக இந்திய மத்திய புலனாய்வுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து கோவிலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுள்ளது. இந்தக் கூட்டத்தில் கோவிலைச்சுற்றி இரும்பு வேலி அமைக்க முடிவு செய்யப் பட்டுள்ளது.

மேலும் திருப்பதி மலையில் உள்ள சி.என்.சி டோல்கேட், சிலாதோவனம், கோகற்பம் அணை, பாலாஜி நகர் ஆகிய பகுதிகளை சுற்றியும் இரும்பு வேலி அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதன் மூலம் காட்டு வழியாக தீவிரவாதிகள் ஊடுருவுவதைத் தடுக்க முடியும். திருப்பதி கோவிலில் குறைந்த எண்ணிக்கையிலான பாதுகாப்பு ஊழியர்களே கடமையில் உள்ளதால் தரிசன வரிசையில் நிற்கும் பக்தர்களைக் கட்டுப் படுத்த முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# நிறைவேற்ற முடியாத திட்டங்களை ஜெயலலிதா சொல்லியிருக்கிறார்



(சென்னை)

ஆட்சிக்கு வரப்போவதில்லை என்ற எண்ணத்தில் நிறைவேற்ற முடியாத திட்டங்களையெல்லாம் தேர்தல் அறிக்கையில் ஜெயலலிதா சொல்லியிருக்கிறார் என துணைமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து புதுக்கோட்டையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது அவர் அதனைத் தெரிவித்துள்ளார். கடந்த 2006ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட வாக்குறுதிகள் வெறும் எழுத்தளவில், ஏட்டளவில் நின்றுவிடாமல் அத்தனையும் நிறைவேற்றியவர் கலைஞர். கடந்த 5 ஆண்டுகளில் அத்தனை திட்டங்களையும் நிறைவேற்றி உலக அளவில் சாதனை படைத்தது கலைஞர் ஆட்சி. இந்த ஆண்டு நடைபெற உள்ள சட்டசபைத் தேர்தலுக்கான வாக்குறுதிகள் வெளியிடப்பட்டது. இதில்

இலவச கிரைண்டர், மிக்சி, பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி, 58 வயது முதியவர்களுக்கு நகரப்பேருந்துகளில் பயணிக்க இலவச அனுமதியட்டை மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மானியத்துடன் ரூ.4 லட்சம் கடன் உயர்த்தி வழங்கப்படும். இவ்வாறு தி.மு.கவின் திட்டங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தபோதெல்லாம் திருமண உதவித் திட்டத்தை தடுத்து நிறுத்தினார். தலைவர், கலைஞர் தேர்தல் அறிக்கையில் சொன்னதைச் செய்வார். சொல்லாததையும் செய்வார் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் உள்ளது.

இப்போது கூட கலைஞர் மீண்டும் 6ஆவது முறையாக ஆட்சிக்கு வந்தால் பிரிட்ஜ், வாசிங்மெஷின் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் வந்துள்ளது.. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வானத்தைக் கிழிப்போம், வைகுண்டத்தைக் காட்டுவோம் என்று நிறைவேற்ற முடியாத காரியத்தை எல்லாம் சொல்லியி ருக்கிறார். அவர் ஆட்சிக்கு வரமாட்டார் என்று அவருக்கே தெரியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# எத்தனை இடையூறு வந்தாலும் அரசியல் பயணம் தொடருவேன்



(சென்னை)


எத்தனை இடையூறுகள் வந்தாலும் என் அரசியல் பயணத்தைத் தொடருவேன் என்றும் நான் பின்வாங்கி விட்டேன் எனக் கூறுவது தவறு. ம.தி.மு.க.வை யாரும் அழித்து விடமுடியாது. உடலில் ரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களை எப்படி பிரிக்க முடியாதோ அதுபோல் என்னையும், தொண்டர்களையும் பிரிக்க முடியாது. ஆட்டுக்கடா சண்டையில் ஆடு பின்னோக்கிச் சென்று முன்னால் ஆக்ரோஷமாகப் பாயும். அதுபோல் குணம் கொண்டவன், நான். வீறுகொண்டு எழுவோம் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்த திருமண விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற் கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில், ம.தி.மு.க., பொதுமக்களின் நலனுக்காக எப்போதும் பாடுபடும். அண்ணாவின் திராவிட இயக்கத்தில் நான் அண்ணாவால் தோற்றுவிக்கப்பட்டவன். ஸ்டெர்லைட் தொழிற்சாலையால் தூத்துக்குடி மக்களுக்கு பல பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. இந்த ஆலையை மூடக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. என்னை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடாமல் தடுப்பதற்காக இந்தத் தொழிற்சாலை சார்பில் ரூ.1,000 கோடி கொடுக்கப் பட்டுள்ளது.

ஆனால் எத்தனை இடையூறுகள் வந்தாலும் என் அரசியல் பயணத்தைத் தொடருவேன். நான் பின்வாங்கி விட்டேன் எனக் கூறுவது தவறு. ஆட்டுக்கிடா சண்டையில் ஆடு பின்னோக்கிச் சென்று முன்னால் ஆக்ரோஷமாக பாயும். அதுபோல் குணம் கொண்டவன், நான். வீறுகொண்டு எழுவோம். ம.தி.மு.க.வை யாரும் அழித்து விடமுடியாது. உடலில் ரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களை எப்படி பிரிக்க முடியாதோ அதுபோல் என்னையும், தொண்டர்களையும் பிரிக்க முடியாது. நான் சுய நலத்திற்காக கட்சி நடத்தவில்லை. தேர்தல் புறக்கணிப்பு என்ற எனது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

# கருணாநிதியின் சொத்து விபரம்

(சென்னை)



தமிழநாடு சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக திருவாரூர் தொகுதியில் நேற்று முன்தினம் முதலமைச்சர் கருணாநிதி வேட்புமனு தாக்கல் செய்திருந்தார். தாக்கல் செய்த வேட்புமனுவில் அவரின் சொத்துவிபரங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் முதல்வர் கருணாநிதியிடம் அசையும் சொத்துக்கள் ரூ.4 கோடியே 92 லட்சத்து 56 ஆயிரத்து 855 என்றும் அசையா சொத்துக்கள் எதுவும் இல்லை என்றும், வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனையவற்றில் இருந்து பெறப்பட்ட கடன்கள் ரூ.10 லட்சம் என்றும் கையில் உள்ள ரொக்கம் ரூ.15 ஆயிரம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனைவி தயாளு அம்மாள் பெயரில் கையிலுள்ள ரொக்கம் ரூ.30 ஆயிரம் என்றும், அசையும் சொத்தின் மதிப்பு ரூ.15 கோடியே 39 லட்சத்து 85 ஆயிரத்து 363 என்றும் அசையா சொத்தின் மதிப்பு ரூ.5 லட்சத்து 51 ஆயிரம் என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளது. துணைவியார் ராசாத்தி அம்மாள் பெயரில் கையில் உள்ள ரொக்கம் ரூ.2 லட்சம் என்றும், அசையும் சொத்து ரூ.20 கோடியே 62 லட்சத்து 61 ஆயிரத்து 924 என்றும், அசையா சொத்துக்களின் மதிப்பு ரூ.3 கோடியே 14 லட்சத்து 38 ஆயிரத்து 628 என்றும், வங்கி, நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனையவற்றில் இருந்து பெறப்பட்ட கடன்கள் ரூ.1 கோடியே 1 லட்சத்து 76 ஆயிரத்து 503 என்றும் குறிப் பிடப்பட்டுள்ளது.

# ஒன்றிணைந்து செயற்பட வருமாறு மனோவுக்கு கூட்டமைப்பு அழைப்பு



(கொழும்பு)
ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

பொதுவான ஒரு அரசியல் தளத்தில் இணைந்து பணியாற்ற முன்வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் மனோ கணேசனிடம் வேண்டுகோள் விடுத்ததாக தவகல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகவும், இதன்போது நடத்தப்பட்ட ஆரம்பகட்ட கலந்துரையாடலின் போதே இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் மனோ கணேசன் கூறியுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளுடன் அரசியல் ரீதியாக நேரடித் தொடர்பு வைத்திருந்தது. அதை அவர்கள் வெளிப்படையாகவே அறிவித்திருந்தனர்.

அத்துடன் ஒன்றிணைந்த இலங்கைக்குள் ஜனநாயக அரசியல் பாதையில் பயணிக்க விரும்புவதாகவும் அவர்கள் கூறியிருந்தனர்.

அவர்கள் விடுத்துள்ள இந்த அழைப்புக் குறித்து எனது கட்சியின் உயர் நிலைப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பேருந்து விபத்து, 25பேர் காயம்

(கொழும்பு)
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த 25 பேர் காயமடைந்த நிலையில் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் இரவு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பயணித்த பேருந்து நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மாங்குளம், கொக்காவில் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் பொலிசாரின் உதவியுடன் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். காயமடைந்தவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது

# சஜித்தின் காலைவாரிவிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள்





(கொழும்பு)
ரணில் விக்ரமசிங்கவுக்கும், சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சியில் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கட்சியின் செயற்குழுக்கூட்டத்தில் முயற்சித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தவிசாளர் காமினி ஜெயவிக்ரம பெரேரா, கபீர் ஹாசிம் மற்றும் மாலிக் சமரவிக்ரம ஆகியோரும் அவருடன் இணைந்து சமரசப் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஐக்கியதேசியக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தலைவர் தெரிவு இடம்பெற்ற வேளையில் சஜித் பிரேமதாஸவின் குழுவினர் தலைவர் தெரிவுக்கு வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவே இறுதி வரை திட்மிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.


கட்சியின் செயற்குழுக் கூட்டம் மாலை 4 மணிக்கு நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோது மாலை 3 மணிக்கே வந்த அவர்கள், தேர்தல் வாக்கெடுப்புக்கு தயார் நிலையில் இருந்தாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் காமினி ஜெயவிக்ரம ஆகியோரின் முயற்சியால் கட்சித் தலைமைத்துவத்துக்கான தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என சஜித் தீர்மானித்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் செயற்குழுக் கூட்டத்தின் போது, மேல்மாகாண சபை உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார சஜித்தை தலைவராக்குவதாக முன்மொழிந்து தேர்தலுக்கு கோரிக்கை விடுத்தார். இதனை அடுத்து தாம் தேர்தலுக்குத் தயார் எனவும், போட்டியாளர்கள் தயாராகும்படியும் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

இதனை அடுத்து கபீர் ஹாசிம், மாலிக் மற்றும் சஜித் ஆகியோர் தனியாகச் சென்று 5 நிமிடங்கள் கலந்துரையாடியதன் பின்னர் தலைமைப் பொறுப்புக்காகத் தான் போட்டியிடவில்லை என்று சஜித் அறிவித்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# நட்டஈடு கோரி தாக்கல் மனு நீதிமன்றத்தால் தள்ளுபடி



(கொழும்பு)
முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.


சரத் என் சில்வா பதவியில் இருந்த போது, தமது பதவியை துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும், தன்னிச்சையாக செயற்பட்டார் என்றும் கண்டியையச சேர்ந்த பத்மசிறி பாலசூரிய என்பவர் கொழும்பு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

தன்னை ஆதாரமற்ற குற்றசசாட்டின் பேரில் கைது செய்து, 294 நாட்கள் சிறையில் வைத்திருந்ததாகவும், இதனால் தமக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு 10 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்க வேண்டும் எனவும் அவர் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்டிருந்தார்

எனினும் இந்த வழக்கு அடிப்படை அற்றது எனக் கூறி, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த வழக்கை நேற்று முன்தினம் தள்ளுபடி செய்துள்ளது.

அத்துடன் குறித்த வழக்குக்குச் செலவான பணத்தின் நான்கு மடங்கு தொகையை சரத் என் சில்வாவுக்கு வழங்க வேண்டும் எனவும், வழக்கை தாக்கல் செய்த நபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

# பிரபாகரனைக் காப்பாற்றுவதற்கு அமெரிக்கா முயற்சி மேற்கொண்டது



(கொழும்பு)
புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனைக் காப்பாற்றும் நோக்கில் இலங்கையில் தலையீடுகளை மேற்கொள்ள அமெரிக்கா ஒரு கட்டத்தில் முயற்சிகளை மேற்கொண்டதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

புலிகளுடனான இறுதிக் க்ட்ட யுத்தத்தின் போது அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய கடற்படையை இலங்கைக்கு அண்மையாக நகர்த்தி இலங்கையை அச்சுறுத்தும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

சூடானை இரண்டாகப் பிரித்தது போன்று, லிபியாவை இரண்டாக பிரிக்க முனைவது போன்று இலங்கையையும் இரண்டாகப் பிரிக்கும் நோக்கிலேயே அமெரிக்கா அவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டது.

ஆயினும் அரசாங்கம் அக்காலகட்டத்தில் புத்திசாலித்தனமாக மாகாண சபைத் தேர்தல்களை நடாத்தி மக்கள் செல்வாக்கு தம் பக்கம் இருப்பதை நிரூபித்ததன் காரணமாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் முயற்சிகள் தோல்வியைத் தழுவியதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கைவிட்டு வெளியேறியது ஐ.சி.ஆர்.சி

(கொழும்பு)
வவுனியாவில் 14வருட காலமாக மக்களுக்குச் சேவையாற்றி வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவலகம் நேற்றுடன் மூடப்பட்டுள்ளது. வடக்கில் கடைசியாக எஞ்சியிருந்த ஒரேயொரு செஞ்சிலுவைச் சங்க அலுவலகமான வவுனியா அலுவலகம் இதுவாகும்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவல்கள் கொழும்பில் இருந்து மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இருந்த அதன் அலுவலகமும் மூடப்பட்டிருந்தது. அதனையடுத்து தற்போது வவுனியா அலுவலகம் மூடப்பட்டுள்ளது.

1989ஆம் ஆண்டில் முதன் முதலாக அனுராதபுரத்தில் இருந்த அலுவலகம் மூலமாக வவுனியா பிரதேசத்தில் செஞ்சிலுவைச்சங்கத்தின் அலுவல்கள் விஸ்தரிக்கப்பட்டன. அதன் பின் 1997ஆம் ஆண்டில் வவுனியாவில் நிரந்தர அலுவலகமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வடக்கின் முதலாவது அலுவலகம் வவுனியா அலுவலகம் என்பதுடன், கடைசியா, மூடப்பட்டதும அந்த அலுவலகமே என்பது குறிப்பிடத்தக்கது.

# இலஞ்ச ஊழல் வழக்கு தள்ளுபடி?



(கொழும்பு)
முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தமூன்று கோடிக்கு மேல் சம்பாதித்த, சொத்துக்களை எப்படிச் சம்பாதித்தார் என்பதை வெளியிட தவறியமைக்கு எதிராக, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து அவரை விடுதலை நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது. சந்திரிக்க குமாரணதுாங்க ஜனாதிபதியாக பதவிவகித்த காலத்தில் சட்டவிரோதமான முறையில் சொத்துச் சேர்த்தார் என்று இவர் மீது வழுக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த இலஞ்ச ஊழல் வழக்கில், அவரின் சாட்சியங்களை விசாரிக்காது, வழக்கில் இருந்து ரத்வத்தவை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அனுருத்த ரத்வத்த நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். இதன் போதே ரத்வத்தவின் சட்டத்தரணி இந்தக் கோரிக்கையை விடுத்தார். இந்த கோரிக்கையை கவனத்தில் கொண்டநீதிபதி சுனில் ராஜபக்ஷ மேலதிக தகவல்களை எதிர்வரும் 9 ஆம் திகதி நீதிமன்றில் சமர்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது எதிர்வரும் 09ஆம் திகதி இது தொடர்பான தீர்ப்பு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மியன்மாரில் ஏற்பட்ட பூகம்பத்தால் 75 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழப்பு



(யன்கூன்)

மியான்மாரின் வடமேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சக்தி வாய்ந்த பூகம்பத்தால் 75 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்துமுள்ளனர்.

மியான்மார் நாட்டில் வடமேற்குப் பகுதியில் தாய்லாந்து எல்லையில் உள்ள தச்சிலியக், தர்பின் மற்றும் ஷான் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8.29 மணியளவில் பூகம்பம் ஏற்பட்டதால் மக்கள் அச்சம் அடைந்தனர்.

வீடுகளில் இருந்து வெளியேறி வீதிகளில் மக்கள் தஞ்சம் அடைந்தனர். தச்சிலியக் மாவட்டத்தில் உள்ள தார்வே நகரில் 5 புத்த துறவி மடங்கள், 35 கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாயின.

அதில் தங்கியிருந்த 75 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 10 பேர் ஆண்கள், 13 பேர் பெண்கள், ஒரு சிறுவன் அடங்குவர். அவர்கள் தவிர 20 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதற்கிடையே, பூகம்பம் ஏற்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் அடுக்கு மாடிக் கட்டடங்களில் குடியிருக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அவர்கள் வைத்தியசாலையில் மற்றும் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்தப் பூகம்பம் தாய்லாந்தின் எல்லைப் பகுதியையும் பாதித்துள்ளது. அங்கு மாசங்க மாவட்டத்திலும் வீடுகள் இடிந்தன. அங்கு ஒரு வீட்டு சுவர் இடிந்ததில் 52 வயதான பெண் உயிரிழந்தார்.

அந்நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள சியாங்ராய் நகரிலும் உணரப்பட்டது. இது தாய்லாந்தின் 2ஆவது பெரிய சுற்றுலா நகரமாகும். பூகம்பத்தை தொடர்ந்து அங்கு உயரமான கட்டடங்களில் வாழும் மக்கள் அங்கிருந்து வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் மாசாய் என்ற இடத்திலும் வைத்திய சாலையில் இருந்த நோயாளிகள் சியாங்ராய் நகருக்கு மாற்றப்பட்டுள்ளனர். இத்தகவலை சியாங்ராய் ஆளுனர் சொம்காய் ஹடாய டான்டி தெரிவித்தார். மியான்மரில் ஏற்பட்ட பூகம்பம் சீனா, வியட்னாம் ஆகிய நாடுகளில் உணரப்பட்டது. ஆனால் அங்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. இந்தப் பூகம்பம் மியான் மர் எல்லையில் தாய்லாந்தில் உள்ள லாவோஸ் என்ற இடத்தை மையமாக கொண்டு பூமிக்கு அடியில் 10 மீற்றர் ஆழ்த்தில் தாக்கியதாக அமெரிக்க வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. 6.8 ரிக்டர் அளவில் பூகம்பம் ஏற்பட்டதாக அறிவித்துள்ளது.




# சீனாவில் பொது இடங்களில் புகைபிடிப்பதற்குத் தடை

(பிஜீங்)

பொதுச்சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பொது இடங்களில் புகை பிடிப்பதற்கு சீன அரசாங்கம் தடை விதித்துள்ளது.

உலகிலேயே சிகரெட் தயாரிக்கும் மிகப்பெரிய நாடாக சீனா இருக்கிறது. இந்த நாட்டில் 30 கோடிக்கும் அதிக மானவர்கள் புகை பிடிக்கிறார்கள். சீனாவில் ஒவ்வொரு ஆண்டும் 12 லட்சம் பேர் புகை பிடிப்பதால் ஏற்படும் நோய்களுக்குப் பலியாகிறார்கள்.



இதைத் தடுப்பதற்காக கடந்த 2008 ஆம் ஆண்டு பெரும்பாலான பொது இடங்களில் புகை பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டது. இப்போது அனைத்துப் பொது இடங்களிலும் புகை பிடிப்பதற்கு வருகிற மே மாதம் முதல் தடை விதிக்கப்பட இருக்கிறது.

வணிக நிறுவனங்கள், புகை பிடிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தங்கள் வாடிக்கையாளர்களுக்கு எடுத்துக் கூறி, அவர்களை அந்தப் பழக்கத்தில் இருந்து விடுவிக்க உதவ வேண்டும் என்றும் சீன அரசாங்கம் அறிவுறுத்தி உள்ளது

# ஜப்பான் அணு உலையில் பணியாற்றும் மூன்று பேருக்கு கதிர்வீச்சுத்தாக்கமாம்



(டோக்கியோ)

ஜப்பானில் அண்மையில் இடம்பெற்ற பூகம்பம், சுனாமி அனர்த்தத்தை அடுத்து அந்த நாட்டின் அணு உலைகளில் பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வெடிப்புக்காரணமாக அங்கு பணியாற்றிய மூவருக்கு கதிர்வீச்சுத்தாக்கம் ஏற்பட்டுள்ளன.

ஜப்பானிலுள்ள அணு உலைகளை குளிர்விக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதில் நிபுணர்கள் ஈடுபட்டு வருகின்றனர். வேறு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்ட அணு உலைகளில் கேபிள் பதிக்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், அப்பணியில் ஈடுபட்டு வரும் 3 பேருக்கு அணுக் கதிர் வீச்சுப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அவர்கள் 3 பேரும் வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் 2 பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருவருக்கு லேசான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதை டோக்கியோ மின்சக்தி நிறுவனம் உறுதி செய்துள்ளது.

இதற்கிடையே, புகுஷிமாவில் வெடித்துச் சிதறிய அணு உலையில் இருந்து கதிர்வீச்சு வெளியேறாமல் தடுக்கும் முயற்சியை ஜப்பானின் அணு மற்றும் தொழிற் பாதுகாப்பு துறை மேற்கொண்டுள்ளது.

# லிபியத் தரைப்படையை தாக்குவதற்கு வியூகம் வகுக்கும் கூட்டணிப்படைகள்

(திரிபோலி)



லிபிய விமானப்படையின் தாக்குதலை முறியடித்துள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள், தற்போது அந்நாட்டின் தரைப்படைகளை தாக்க வியூகம் வகுத்துள்ளன. லிபியாவை 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்டு வரும் கடாபியைப் பதவி விலகக்கோரி, எதிர்க் கட்சியினர் போராட்டம் நடத்தினர். போராட்டக்காரர்கள் மீது லிபிய விமானப்படை விமானங்கள் குண்டு வீசியதால் நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகினர். கடாபியைப் பதவி விலகும்படி அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வற்புறுத்தின.

இதற்கிடையே ஐ.நா., வின் ஒப்புதலோடு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்தைய நாட்டுப் படைகள், லிபியா மீது தாக்குதலை நடத்தி வருகின்றன. இந்த தாக்குதலில் லிபியாவின் விமானப்படைத் தாக்குதல் ஒடுக்கப்பட்டு விட்டது. இதையடுத்து, போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தும் பீரங்கி மற்றும் ஏவுகணைகளைத் தவிடுபொடியாக்க அமெரிக்கா தலைமையிலான் படைகள் திட்டமிட்டுள்ளன. ஐந்தாவது நாளாக ஜின்டான், ஜாவியா, மிஸ்ரட்டா, அஜ்தாபியா ஆகிய நகரங்களில் கடாபி இராணுவத்தின் தாக்குதல் தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# லிபியாவின் விமான பறப்பு தடைவலயம்; பொறுப்பை ஏற்கவுள்ள நேட்டோ அமைப்பு

லிபியாவில் விமானப் பறப்பு தடை வலயத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கான தலைமையை அமெரிக்காவிடமிருந்து பொறுப்பேற்க நேட்டோ (வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பு) இணக்கம் தெரிவித்துள்ளது.

லிபியாவில் ஐ.நா.வின் தீர்மானத்திற்கிணங்க விமானப் பறப்பு தடை வலயத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைக்கு தலைமை வகிக்க அமெரிக்க ஆரம்பத்தில் இணக்கம் தெரிவித்தது. எனினும் இதில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பாத்திரத்தையே அமெரிக்கா வகிக்கும் எனவும் விரைவில் தலைமைப் பொறுப்பை மற்றவர்களிடம் கையளிப்பதற்கு விரும்புவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இவ்விடயத்தில் நேட்டோவுக்கு பரந்தளவிலான பொறுப்புகள் கொடுக்கப்படுவது குறித்த பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. எதிர்வரும் நாட்களில் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படும் என நேட்டோ செயலாளர் நாயகம் அன்ட்ரெஸ் போக் ரஸ்முசென் கூறினார். துருக்கி உட்பட நேட்டோவில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் லிபியா மீதான நடவடிக்கைகளுக்கான தலைமையை நேட்டோ ஏற்றுக்கொள்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளன என ரஸ்முசென் கூறினார்.

# அணுமின்நிலைய பாதுகாப்பை அமெரிக்காவும் சோதிக்கிறது

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள அணுமின் நிலையப் பாதுகாப்பை அந்நாட்டின் அணு ஒழுங்குமுறை ஆணையம் (என்.ஆர்.சி) இரண்டு கட்டமாக ஆய்வு செய்யவுள்ளது.

ஜப்பான் நாட்டில் அண்மையில் ஏற்பட்ட நில நடுக்கம், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியால் அங்குள்ள அணுஉலைகள் வெடித்து அணுக்கதிர்வீச்சு பரவி வருகிறது.

இதன் எதிரொலியாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமெரிக்கா தங்கள் நாட்டில் உள்ள அணுஉலைகளின் பாதுகாப்பை மறு ஆய்வு செய்யும் பணியில் இறங்கியுள்ளது.

இப்போது ஜப்பானில் இருந்து வரும் தகவல்களை மிகவும் கவனமுடன் ஆராய்ந்து வருகிறோம். எதிர்காலத்தில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என என்.ஆர்.சியின் தலைவர் ஜாக்கோ தெரிவித்துள்ளார்.

அணு உலைப் பாதுகாப்பு தொடர்பான கூட்டத்தில் அணுஉலைகளை ஆராய பணிக்குழு அமைப்பதற்கு அணு ஒழுங்குமுறை ஆணையம் ஆதரவு தெரிவித்துள்ளது. இந்தக் குழுவில் என்.ஆர்.சி.யின் இப்போதைய மேலாளர் மற்றும் முன்னாள் நிபுணர்கள் இடம்பெறுவர். இந்தக் குழு ஜப்பானில் இப்போது ஏற்பட்டுள்ள சூழலை குறுகிய கால அடிப்படையிலும், நீண்ட கால அடிப்படையிலும் ஆராயும்.

இதுதொடர்பான அறிக்கையை அடுத்த 6 மாதத்திற்குள் இந்தக் குழு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மனிதாபிமான உதவியை புலிகளிடம் வழங்க இந்திய அரசு ஒருபோதும் விரும்பவில்லை

## விக்கிலீக்ஸ் வெளியிடும் தகவல்




(கொழும்பு)

2004 ஆம் ஆண்டு சுனாமி ஆழிப்பேரலையின் பின்னர் இந்தியாவின் உதவிகள் புலிகளிடம் நேரடியாகக் கையளிக்கப்படுவதற்கு புதுடில்லி விரும்பவில்லை என விக்கிலீக்ஸ் இணையத் தளம் வெளியிட்டுள்ள தகவல் குறிப்பிலிருந்து தெரியவருகின்றது.

இந்தியாவின் உதவிகள் புலிகளிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டால், அது புலிகளை அங்கீகரிப்பதாக அமைந்துவிடுமென மத்திய அரசு கருதியதாக இத் தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இந்தியாவின் உதவிகள் இலங்கை அரசாங்கத்தின் மூலம் செல்வதையிட்டு தனக்கு ஆட்சேபனை இல்லையென 2004 ஆம் ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற சுனாமி ஆழிப்பேரலையின் பின்னர் இந்தியா கூறியதாக விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதரகத்தின் தகவல் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வடபகுதி மக்களுக்கான உதவிகளை நேரடியாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஊடாக வழங்கப்படவேண்டும் என புலிகள் விடுத்த கோரிக்கையை ஏற்கத் தயாராகவில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் தரண்ஜித்சிங் சந்து கூறினார்.

இந்தியாவின் நிலைப்பாட்டையே அமெரிக்க அரசாங்கமும கொண்டிருப்பதாக இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் டேவிட் மல்பீல்ட் தனது குறிப்பில் தெரிவித்திருந்தார்.

சுனாமி ஆழிப்பேரலை உதவிகள் பற்றிய கருத்துக்கள் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்தப் பயன்படும் என புலிகள் கருதுவது நப்பாசையாகும் என தரண்ஜித்சிங் சந்து கூறினாா.

சுனாமி ஆழிப்பேரலையின் பின் ஏற்பட்ட நிலைமைகளால் இலங்கை அரசாங்கமும் புலிகளும் மோதலிடும் வலுவை இழந்த பின்னர், ஏதோவொரு வகையில் இரு தரப்பினருக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு குறித்து தரண்ஜித்சிங் சந்து ஆராய்ந்தார் என இத்தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லூரில் விளையாட்டு விழா

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா நாளை பி.ப 1.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டு விழாவில், பிரதம விருந்தினராக திருநெல்வேலி மக்கள் வங்கி முகாமையாளர் ஆ.சத்தியமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளதுடன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரையும், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கமும், கௌரவ விருந்தினர்களாக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசாவும், யாழ். மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுநர் கா. சுதாகரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (மி)

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

வலி. தென்மேற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூடடம் நாளை காலை 10 மணிக்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் இ. மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முக்கியமான பல முடிவுகளை எடுக்கவுள்ளதால் இக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபை செயலர் திருமதி புஸ்பமலர் சிவலிங்கமும், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி க.சிவசோதியும் அழைக்கப்பட்டுள்ளனர். ஒரு சனசமூக நிலையத்திலிருந்து தலைவர், செயலாளர் உட்பட 3 உறுப்பினர்களுக்குக் குறையாது கலந்துகொள்ளுமாறும் சமாசத் தலைவர் இ.மனோகரன் கேட்டுக்கொண்டுள்ளார். (மி)

## மேற்குலகுக்கு எதிராக....

கண்டித்து கோஷங்களை எழுப்பியுள்ளனர்.

அத்துடன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் உருவப் பொம்மை மற்றும் பராக் ஒபாமாவின் கார்ட்டூன் சித்திரம் வரையப்பட்ட பதாகைகளுக்கு இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தீவைத்து எரித்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜும்மா பள்ளிவாசலில் இருந்து அமெரிக்கத் தூதரகத்தை நோக்கிச் செல்ல முற்பட்டபோதிலும், பொலிஸார் காலி வீதியில் தடுப்பு வேலிகளை அமைத்து அவர்களை அமெரிக்கத் தூதரகத்தை நோக்கிச் செல்லவிடாது தடைவிதித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மேற்குலக நாடுகள் லிபியா மீது மேற்கொண்டுவரும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

எகிப்தில் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் விவாகரத்தைக் கையாண்டது போல் லிபியாவின் விவகாரத்தை அமெரிக்கா கையாளவில்லை என அவர் குற்றம் சுமத்தினார்.

அதேபோன்று பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் தொடர்பில் அமெரிக்கா கரிசனை கொள்வதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் லிபியாவின் உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்கா தலையிடுவது ஏன் என கேள்வியெழுப்பிய அவர், அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழிக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், வாசுதேவ நாணயக்கார மற்றும் பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா, மேல்மாகாண அமைச்சர் அலவி மௌலான உட்பட பலர் கலந்து கொண்டனர்.

லிபியாவுக்கு எதிரான படை நடவடிக்கையை ஆரம்பித்துள்ள அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற மேற்கு நாடுகளைக் கண்டித்தும், லிபிய ஜனாதிபதி கேணல் கடாபிக்கு ஆதரவாகவும் போராட்டங்களை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தர விட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு....

நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹலுகல்ல தெரிவித்துள்ளார்.

நோர்வே அனுசரணையுடனான போர்நிறுத்தம் அமுலுக்கு வந்ததிலிருந்து அது முறியும் வரையான காலப்பகுதியில் மில்லியன் கணக்கான பணம் வெளிநாட்டு உதவி நிறுவனங்களினூடாக உள்ளூர் நிறுவனங்களுக்கு கிடைத்திருக்கின்றது.

இப்பணத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் யார் என்பது குறித்தும், இவ்வாறு பெறப்பட்ட பணம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது குறித்துமே தற்போது குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிக கவனம் செலுத்தி தனது விசாரணைகளை முன்னகர்த்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு விசாரணைக்குட்படுத்தப்பட்ட நிறுவனங்களில் தேசிய சமாதானப் பேரவையும் உள்ளடங்குவதாகத் தெரியவருகிறது.

வெளிநாட்டு அரசுகளிடமிருந்து எவ்வாறு நேரடியாக பணம் பெற முடிந்தது என்பது குறித்து அறிய நாம் விரும்புவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி விடயம் குறித்து குறிப்பிட்ட சில வெளிநாடுகளின் எதிர்க்கட்சிகள் சம்பந்தப்பட்ட நாடுகளின் நாடாளுமன்றத்தில் கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, அனைத்துலக மன்னிப்புச்சபையின் முன்னாள் தலைவர் இரேனி கான் மற்றும் பிரதித்தலைவர் ஆகியோர் லண்டனைத் தளமாகக் கொண்ட மனிதஉரிமைகள் அமைப்பிடம் இருந்து 800,000 புவுண்ட்ஸ்களுக்கும் அதிகமான சிறப்புக் கொடுப்பனவைப் பெற்றுள்ள விவகாரம் அண்மையில் அம்பலமானது.

இது உதவி நிறுவனங்களின் உயர் மட்டத்தில் நிலவும் மிகத் தீவிரமான ஒழுக்கீனத்தை வெளிப்படுத்துகிறது.

2007 தொடக்கத்தில் இலங்கை அரசுக்கு எதிரான புலிகளின் பரப்புரைகளுக்குப் பின்புலத்தில் அனைத்துலக மன்னிப்பு சபையே இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சந்திரிகாவின் பாதுகாப்பு அதிகாரிக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறை

## கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் பாதுகாப்பு பிரிவின் பிரதம அதிகாரியாகப் பணியாற்றிய நிஹால் கருணாரட்னவிற்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கி கொழும்பு மேல்நீதி மன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த பெத்தேகன சஞ்சீவ என்பவரை 2001ஆம் ஆண்டு பெப்ரவரி 2ஆம் திகதி சமுத்திர ஜீவா தலைமையிலான பொலிஸ அதிகாரிகள் கைது செய்ய சென்றபோது பொலிஸாருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக நிஹால் கருணாரத்ன மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சஞ்சீவ என்ற பாதாள உலக குழுவைச்சேர்ந்த நபர் நிஹால் கருணாரத்னாவின் நெருங்கிய நண்பர் என்றும், இவர் முன்னாள் ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்க இருந்த காலத்தில் அவரின் பாதுகாப்புப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த நிஹால் கருணாரத்னாவிற்கு கீழ் கடமையாற்றியிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் சட்டத்தரணியும் அனைத்து இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவருமான குமார் பொன்னம்பலத்தின் கொலையுடன் சம்பந்தப்பட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்த சஞ்சீவ, 2001 ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி கொழும்பு புறநகர் பகுதி ஒன்றில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

கடந்த 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெள்ளவத்தைப் பகுதியில் வைத்து குமார் பொன்னம்பலம் பாதாள உலக குழுவைச்சேர்ந்த முரட்டுசமன், பொலிஸ் உத்தியோகத்தர் சுனில் ரணசிங்க ஆகியோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைக்கான ஏற்பாட்டை சந்திரிகாவின் பாதுகாப்பு பிரிவைச்சேர்ந்த நிஹால் கருணாரத்னா, சஞ்சீவ ஆகியோரே செய்ததாக பின்னர் தெரியவந்தது.

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த நபரைக் கைது செய்யச் சென்றபோது தனது கடமையை செய்யவிடாமல் தடுத்த நிஹால் கருணாரத்னவிற்கு எதிராக பொலிஸ் பொறுப்பதிகாரி சமுத்திரஜீவ நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்தார்.

எனவே 25ஆயிரம் ரூபா அபராதத் தொகையை நீதிமன்றத்திற்கு செலுத்த வேண்டும் என உத்தரவிட்ட நீதிபதி, 3 இலட்சம் ரூபா நட்டஈட்டினை பொலிஸ் பொறுப்பதிகாரி எச்.சமுத்திர ஜீவாவுக்கு வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார்.

## சகலரும்....

படவுள்ள அரசியல் தீர்விற்கான வழிவகைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சு வார்த்தை தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருகின்றது. எனினும் பிரபாகரன் கனவு கண்ட ஈழத்தை வழங்க மாட்டேன்.

எனது இலக்கு சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தான தீர்வாகத்தான் அமையும். இந்த நாட்டில் பயங்கரவாதம் முறியடிக்கப்பட்டுவிட்டது. தேசியப் பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வு காணப்பட வேண்டும். ஆனால் அது ஏனைய மக்களை புண்படுத்துவதாக இருக்கக்கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சில் அவர்கள் பல திட்டங்களை சமர்ப்பித்துள்ளனர். ஆனால் இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை. 60 வருடங்களாக நிலவும் பிரச்சினையை ஓரிரண்டு நாட்களில் தீர்க்கமுடியாது.


சர்வதேச தொண்டு நிறுவனங்களின் சேவையைத் தடைசெய்வது அரசாங்கத்தின் நோக்கமல்ல. மாறாக அந்த நிறுவனங்கள் வெளிநாட்டு நிதியை முறைகேடாகப் பயன்படுத்துகின்றன. அண்மையில்கூட சில தொண்டுநிறுவனங்கள் 500 மில்லியன் ரூபாவை தமது செயற்திட்டத்திற்கு பெற்றிருந்தனர். ஆனால் அந்த நிதியை எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதற்கு எவ்வித தகவலும் இல்லை.

நாட்டில் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்று முடிந்த பின்னரே சுயாதீன தேர்தல் ஆணையகத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவது இந்தத் தேர்தல்கள் நிறைவுபெற்ற பின்னரேயாகும்.

அதேவேளை, கொழும்பின் 5 உள்ளூராட்சி சபைகளை ஒன்றிணைத்து அமைக்கப்பட்டுள்ள கொழும்பு பெருநகர கூட்டுத்தாபனத்தினால் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு எவ்வித தடையும் ஏற்படாது என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றைய இச்சந்திப்பில் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், ஹெகலிய ரம்புக்வெல, வாசுதேவ நாணயக்கார, சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, ஊடகச் செயலாளர் டபிள்யூ.பி.கனேகல்ல ஆகியோர் கலந்துகொண்டனர்.



# முன்னாள் புலிகள் எதிர்நோக்கும் சவால்; சமூக நீரோட்டத்தில் இணைவதில் சிக்கல்

## அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா பலருக்கு உதவி



(கொழும்பு)

புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் பலர் சமூக நீரோட்டத்தில் ஒன்றிணைந்து கொள்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர் என்று பி.பி.சி. தனது செய்தி ஆய்வு ஒன்றில் தெரிவித்துள்ளது. இலங்கையில் போர் முடிவுக்கு வந்து இரண்டு வருடங்கள் நிறைவு பெறவுள்ள நிலையில், வட பகுதியில் இருக்கும் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் பலர் தாம் சமூகத்தால் புறக்கணிக்கப்படுவதாக பி.பி.சி.செய்தி வெளியிட்டுள்ளது.

தேசிய மட்டத்திலான நல்லிணக்க நடவடிக்கைகளில் அவர்களை உட்படுத்த வேண்டிய அவசியம் குறித்து பலரும் பேசிவருகின்ற சூழ்நிலையில் தொழில், பாதுகாப்பு திருமணம், வீட்டு வசதி போன்ற பல வகைகளிலும் தாம் புறக்கணிக்கப்படுவதை உணர்வதாக இவர்களில் பலர் கூறியுள்ளனர்.

தமது பிள்ளைகளை புலி உறுப்பினர்களுக்கு திருமணம் செய்து வைக்க பல பெற்றோர் தயக்கம் காட்டுவதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். அதே போன்று தமது சொந்த ஊரிலேயே தமக்கு இருக்க வாடகைக்குக் கூட இடம் வழங்க மறுக்கப்படுவதாக ஒரு பெண் புலி உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பல வகைகளிலும் புறக்கணிக்கப்படும் முன்னாள் புலி உறுப்பினர்கள் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்து வருவதாக பி.பி.சி.தெரிவித்துள்ளது.

புலிகளின் இயக்கத்தில் கலப்புத்திருமணம் செய்த தம்பதிகளில் ஆண் காணாமல் போன நிலையில், அவரது குடும்பத்தால் சாதியைக் காரணம் காட்டி அவரது மனைவி புறக்கணிக்கப்படுவதான நிலைமையும் யாழ்ப்பாணத்தில் காணபபடுவதாக யாழ். அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவரான கேசவன் தெரிவித்துள்ளார்.

தாம் புறக்கணிக்கப்படும் நிலைமை காரணமாக பல புலி உறுப்பினர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் குமரன் பத்மநாதன் ஆகியோரின் உதவியை நாடி செல்லும் நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் பி.பி.சி.செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

தம்மிடம் வரும் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு தாம் உதவுவதாகக் கூறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவர்களது பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்க பல காலம் எடுக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு சமூகம் உரிய கௌரவத்தை கொடுக்கவேண்டும் எனவும் இச்செய்தியில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாண இசை விழா யாழ். நகரில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய நாட்டுப்புற இசை வடிவங்களின் அடையாளங்களை வெளிக்கொண்டுவரும் யாழ்ப்பாண இசைவிழா- 2011 நேற்று யாழ். மாநகரசபை மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

இந்நிகழ்வினை யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்துவைத்தார்.

முன்னதாக ஆரம்ப நிகழ்விற்கு வருகைதந்திருந்த யாழ் மாவட்ட கட்டளைத்தளபதி, யாழ்பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் என்.சண்முகலிங்கம், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் என். சிறிதேவி, நோர்வே தூதுவர் கில்டிகுருடி சோல்ட் அமெரிக்க உதவித்திட்ட அதிகாரி முதலானோர் நிகழ்விடத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு சர்வமதப் பெரியவர்களின் ஆசியினைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.இந்நிகழ்வுகள் தொடர்ந்து இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. இதில் 23 உள்ளூர்க் கலைஞர்குழுக்கள் உட்பட பெருமளவு வெளிநாட்டுக்கலைஞர்களின் நிகழ்வுகள் மேடையேற்றப்படவுள்ளன.

மேலும் இந்நிகழ்வினை சேவாலங்கா நிறுவனத்தினர் ஒழுங்குபடுத்தி நடாத்துவதுடன், இதற்கு நோர்வே தூதுவராலயம், அமெரிக்க உதவித்திட்டம் (யூ.எஸ்.எயிட்) என்பனவற்றின் நிதிப்பங்களிப்புடனும் ஊடக அனுசரணையுடனும் நடைபெறுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் நேற்றைய நிகழ்வுகளில் பெருமளவான பொதுமக்கள் உள்நாட்டு வெளிநாட்டு கலைஞர்கள், செய்தியாளர்கள் மற்றும் புகைப்படப்பிடிப்பாளர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(பா)

# "அப்டமின் -பி" கலவை விற்பனைக்குத் தடை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு



(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு தனியார் மருந்தகங்களில் விற்பனை செய்யப்பட்டுவரும் அப்டமின் - பி. கலவை மருந்தினை (சிரப்) விற்பனை செய்வதற்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபாலசிறிசேன தடைவிதித்துள்ளார்.

தேசிய ஔடத அதிகாரசபையினர் மஹவ பிரதேசத்திலுள்ள தனியார் மருந்தகமொன்றில் நடாத்திய திடீர் சோதனை நடவடிக்கையின்போது குறித்த மருந்துக்கலவையில் பாதகமான விளைவு காணப்பட்டதை அடுத்தே, சுகாதார அமைச்சர் இந்த தடையுத்தரவைப்பிறப்பித்ததாக தேசிய ஔடத அதிகார சபையின் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த பெனராகம தெரிவித்தார். பசியைத் தூண்டுவதற்கான மருந்துக்கலவையே இதுவெனத்தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கையில்....

உதவிகளைப் புரிவதற்கே இலங்கைக்கு வந்துள்ளதாக அமெரிக்கத் தூதுவர் எடுத்துரைத்தபோதும் அப்போதைய வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இதனை ஏற்க மறுத்துவிட்டார் என விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள கேபிள் தகவல்கள் தெரிவிக்கின்றன.சுனாமி நிவாரணத்திற்கு குறிப்பிட்ட பல உதவிகளை நீங்கள் செய்வதால் இலங்கை-அமெரிக்க கூட்டு நடவடிக்கையாக அது அமைந்துவிடக்கூடாது என்றும் இதனால் இந்தியாவை தாம் பகைக்க நேரிடலாம் என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்காவிற்கு தெரிவித்துள்ளார்.

இலங்கையானது இந்தியாவை ஒதுக்கி சீனாவின் பக்கம் சார்ந்திருப்பதுபோல் ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி இலங்கை மக்களை நம்ப வைப்பதும், அதேவேளை இலங்கை சீனாவின் பக்கம் சேர்ந்து விடாமல் இருப்பதற்கு இலங்கைக்கு உதவி செய்வதாக இந்தியா, இந்திய மக்களிடம் காட்டிக்கொள்வதுமாக தொடர்ந்துள்ளது என அத்தகவல்தெரிவிக்கிறது.

## இந்திய அணு....

நிலையங்கள் உள்ளன. அவற்றில் கல்பாக்கம் அணுமின் நிலையம் இலங்கைக்கு நெருக்கமானது. இம்மின் நிலையங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்து குறித்து நாம் விழிப்பாக இருக்கிறோம் என அவர் கூறினார்.

ஜப்பானின் புகுஷிமா அணுமின் நிலைய வெடிப்பினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தலை தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் இன்று ஒத்திவைப்பு பிரேரணையொன்றை முன்வைத்தது.

கதிர்வீச்சு தாக்கம் குறித்து ஆராய்வதற்காக இலங்கை அணுசக்தி அதிகாரசபை ஏற்கெனவே வளி மற்றும் மழை நீரை பரிசோதித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை ஏதேனும் கதிரியக்க பாதிப்பு இருந்தால் அதை இம்மாத இறுதியிலேயே எதிர்பார்க்க முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளதாகவும் அதனால் அவ்வேளையில் மழை நீர் பரிசோதிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். எவ்வாறெனினும் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படுவதற்கு சாத்தியம் குறைவு என அவர் கூறினார்.

# ஆசிரியர் வெற்றிடங்கள்; நிரப்ப உடன் நடவடிக்கை

## ஜனாதிபதி அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

மாத்தறை - பாலட்டுவ குணரத்ன மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று மாடிக் கட்டடத்தை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

ஆசிரியர்கள் கற்பித்தலில் மேலும் கவனம் செலுத்தினால் டியூசன் யுகத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க முடியும்.

பாடசாலைக் கல்விக்குப்பின் பல்கலைக்கழக வாய்ப்புக்கிட்டாத 95 வீதமான மாணவர்களின் எதிர்காலத்தை சுபீட்சமாக்குவதற்கான வேலைத் திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப் படுத்தி வருகின்றது.

நாடளாவிய ரீதியில் 45,000 இற்கு மேற்பட்ட ஆசிரியர் நியமனங்களை அரசாங்கம் வழங்கியுள்ள போதும், தற்போது நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கற்பித்தலில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மாத்திரமே சர்வதேச மட்டத்திற்கு மாணவர்களை உருவாக்க முடியும் .

பாடசாலைக் கற்பித்தலில் குறைபாடுகள் இருப்பதால்தான் மாணவர்கள் டியூசனுக்குச் செல்ல முற்படுகின்றார்கள். அதனால் கற்பித்தலில் ஆசிரியர்கள் மென்மேலும் கவனம் செலுத்துவது அவசியம்.

அரசாங்கம் பாதுகாப்பு, சுகாதாரம் போன்ற துறைகளுக்கு வழங்கும் முக்கியத்துவத்தைப் போன்றே கல்விக்கும் முக்கியத்துவமளிக்கிறது. அதற்காக பெருந்தொகை நிதியையும் செலவிட்டு வருகிறது.

பாடசாலைகளை முன்னேற்றுவதில் நாம் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறோம். ஆசிரியர் பற்றாக்குறை பற்றி பேசப்பட்டாலும், தற்போதுள்ள ஆசிரியர்களை முறையாக பகிர்ந்தால் இப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் என்பது எனது நம்பிக்கை.

நாம் தேசிய மட்டத்தில் மட்டுமன்றி உலக தரத்துக்கு எமது மாணவர்களை உருவாக்க வேண்டிய தேவையுள்ளது என்பதை ஆசிரியர்கள் கருத்திற் கொண்டு கற்பித்தலை மேற்கொள்வது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## அவசரகாலச்...

தேவையில்லை என அரசாங்கம் கருதுகிறதோ, அப்போதுதான் இந்தச் சட்டம் திரும்பப்பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது புலிகள் தோற்கடிக்கப்பட்டு நாடு சமாதானக் காற்றை சுவாசித்துக் கொண்டிருக்கிறது என்பது உண்மை. எனினும் புலிகளின் அச்சுறுத்தல் இன்னும் தணியவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மரண அறிவித்தல்



**திரு.**
**செபஸ்ரியாம்பிள்ளை மரியநாயகம்**

அந்தோனியார் வீதி மாதகலைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செபஸ்ரியாம்பிள்ளை மரியநாயகம் அவர்கள் அகாலமரணம் அடைந்துள்ளார். அன்னார் காலம் சென்ற திருமதி றெஜீஸ் அவர்களின் அன்புக்கணவரும், சுபதினி அவர்களின் அன்புத்தந்தையும், ஜெகன் அவர்களின் அன்பு மாமனும் சம்சிகா, லறோசிகன் ஆகியோரின் அருமைப்பேரனும், அன்ரனின் நேச சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நேற்று 25..03.2011 பிற்பகல் புனித கதிரை மாதா சேமக்காலையில் நடைபெற்றது என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:-
**மருமகன் ஜெகன்.**

(112)

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.